பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 28 திங்கட்கிழமை (14-10-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:321

## புலிகள் என்ற சந்தேகத்தில்
# ஐந்து தமிழ் இளைஞர்கள் அதிரடிப்படையால் கைது!

## மகா ஓயா பொலீஸில் தடுத்துவைப்பு

அம்பாறை,ஒக்ரோபர்14

**அம்பாறையில் பேருதலாவ என்னும் இடத்தில் வைத்து ஐந்து தமிழ் இளைஞர்களை விசேட அதிரடிப்படையினர் கைது செய்திருக்கின்றனர்.**

**சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடினர் எனத் தெரிவித்து கைது செய்யப்பட்டிருக்கும் இந்த ஐவரும் மகாஓயா பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.**

கடந்த வெள்ளிக்கிழமை மாலை இப்பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் சிலர் நடமாடினர் என்று தமக்குக் கிடைத்த தகவலையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும், இவர்கள் அனைவரும் புலிகளின பயிற்சி முகாமில் இருந்து தப்பிவந்தவர்களாக இருக்கலாம் என்று தாம் சந்தேகிப்பதாகவும் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இரத்தினசிங்கம் விநோதன் (வயது 17), பிரகலாப்பிள்ளை கணேசன் (வயது 18), சோமன் பிரகாஷ் (வயது 16), சின்னத்துரை வசந்தன் (வயது

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தீவகத்திலிருந்து புலிகள் திரும்பினர்

யாழ்ப்பாணம்,ஒக்.14

அரசியல் பணிகளுக்காக நயினா தீவுக்குச் சென்றிருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பிரமுகர்கள் நேற்று யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நயினா தீவுக்குச் சென்றிருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த பாப்பா, செம்மணன், சேரலாதன் ஆகி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் குழு திருமலை விஜயம்

கொழும்பு,ஒக்.14

திருமலையில் நிலைமையைச் சுமுகமாக்கும் பொருட்டு அமைச்சர்கள் குழு ஒன்று நேற்று அங்கு விஜயம் செய்தது.

இந்தக் குழுவில் ஜோன் அமரதுங்க, தி.மகேஸ்வரன், கர்மினி லொக்குகே ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

திருமலைப் பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக திருமலை செயலகத்தில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. கூட்டத்தின் இறுதியில் நான்கு மதங்களையும் சேர்ந்த பெரியார்கள் கொண்ட விஷேட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வாடகைக்கு அமர்த்தும் சிறிய விமானங்கள் விரைவில் சேவைக்கு

யாழ்ப்பாணம்,ஒக்.14

உள்நாட்டுக்குள் சிறு குழுக்களாக விமானப் பயணம் மேற்கொள்வோரின வசதி கருதி வாடகைக்கு அமர்த்திப பயன்படுத்தும் சிறிய விமானங்களை குடாநாட்டுக்கு சேவையில் ஈடுபடுத்த விமான சேவை நிறுவனம் ஒன்று ஏற்பாடு செய்து வருகிறது.

எட்டுப்பேர் பயணம் செய்யக் கூடிய இருக்கைகள் கொண்ட சிறிய - சொகுசு - விமானங்களை வெளிநாட்டிலிருந்து தருவித்து விரைவில் சேவையில்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# 2 நாள்களாக ஹர்த்தாலால் தமிழர் தாயகம் ஸ்தம்பிதம்!

## காஞ்சிரங்குடா,திருகோணமலை சம்பவங்களால் சோகம்

தொடர்ந்து அனுஷ்டிக்கப்பட்டு வரும் ஹர்த்தால் காரணமாக நேற்றும் தமிழரின் தாயகமான வடக்கு - கிழக்கில் பல பிரதேசங்கள் முற்று முழுதாக ஸ்தம்பித்தன.

கடந்த புதன்கிழமை மாலை திருக்கோயில், காஞ்சிரங்குடாவிலும் கடந்த வெள்ளியன்று காலை திருகோணமலையிலும் தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட மனிதப் படுகொலை அவலத்தின் சோகத்தில் தமிழர் பிரதேசம தொடர்ந்து மூழ்கியுள்ளது.

தமிழ்ப் பிரதேசங்களில் ஹர்த்தால அனுஷ்டிக்கப்பட்ட போதும் குறிப்பிடத்தக்க அசம்பாவிதங்கள் ஏதும் நிகழவில்லை. பதற்றத்துடன் கூடிய அமைதி நிலை நீடிக்கின்றது.

**அம்பாறையில்**

அம்பாறையில் கரையோரப் பிரதேசங்களில் நேற்று நான்காவது நாளாக ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன் காரணமாக அம்பாறை தமிழ்ப் பிரதேசங்கள் எங்கும் கடைகள், வர்த்தக நிறுவனங்கள் யாவும் அடைக்கப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்து முழுமையாக ஸ்தம்பிதமடைந்திருந்தது.

தமிழ் மக்கள் வாழும் கிராமங்களில் உள்ள வீடுகளில் வெள்ளை, கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு பூரண துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

எனினும், எவ்வித அசம்பாவிதங்களுமின்றி கரையோரப்பிரதேசம் மிக அமைதியாகக் காணப்பட்டது.

பொலீஸாரும் பாதுகாப்புப் படை

(14 ஆம் பக்கம் பார்க்க)

## காஞ்சிரங்குடா முகாமில் மேலதிக படையினர் குவிப்பு!

காஞ்சிரங்குடா மற்றும் தாண்டியடி அதிரடிப்படை முகாமில் நேற்று முன்தினம் மேலும் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

ஹெலிமூலம் பல படையினர் அங்கு புதிதாக வந்துள்ளனர். இதையடுத்து அப்பகுதி மக்கள் மத்தியில் பீதி கிளம்பியுள்ளது.

பருவமழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் இனித்தான் வயல் வேலை. ஆகவே, அப்பகுதி விவசாயிகள் அடிக்கடி வயல் வேலைக்கு சென்று வர வேண்டிய காலம். வயல்களுக்கு சென்று வருவதானால் காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாமைத் தாண்டியே விவசாயிகள் வேலைக்குச் செல்ல வேண்டும்.

இந்த நேரம் பார்த்து அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். இது அப் பகுதி மக்கள் மத்தியில் பதற்றம் அதிகரிக்கச் செய்துள்ளது.

(ஐ-9-12)

# ஊடகவியலாளர் மாநாடு வீரசிங்கம் மண்டபத்தில்

## 19,20,21,22 ஆம் திகதிகளில் நடக்கும்

யாழ்ப்பாணம்,ஒக்.14

விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக்கழகம் 'நிதர்சனம்' நிறுவனத்துடனும், தமிழ்த்தாய் வெளியீட்டகத்துடனும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள ஊடகவியலாளர்கள் கலை, இலக்கிய படைப்பாளிகள் சங்கமிக்கும் நான்கு நாள் மாநாடு எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாக உள்ளது.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டுக்கு 'மானிடத்தின் தமிழ்க் கூடல் - 2002' எனப் பெயரிடப்பட்டிருப்பதாக மாநாட்டு ஒருங்கிணைப்புக் குழு நேற்று அறிவித்திருக்கிறது.

19,20,21,22 ஆகிய திகதிகளில்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# இராமேஸ்வரத்தில் கைப்பற்றப்பட்ட ரொக்கட் ஏவுகணை புலிகளுடையதா?

## புலனாய்வு விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளனவாம்

இராமேஸ்வரம்,ஒக்.14

இராமேஸ்வரத்தில் கடந்த மாதம் கைப்பற்றப்பட்ட ரொக்கெட் ஏவுகணை விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமானது என்பது போன்ற பல திடுக்கிடும் தகவல்கள் புலனாய்வு விசாரணையில வெளியாகி வருகின்றன.

இந்திய நாளிதழ் ஒன்று இவ்வாறு தகவல்வெளியிட்டுள்ளது.

இராமேஸ்வரத்தில் உள்ள இராமநாதபுரம் மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் சிகாமணி என்பவரது கடையில் பொலீஸார் கடந்த மாதம் 21 ஆம் திகதி சோதனை நடத்தியதில் கடையில் இருந்து கஞ்சா, மாபின், ஹெரோயின் போன்ற போதைப் பொருள்களும், ஏ.கே.47 ரக துப்பாக்கி ரவைகளும் கைப்பற்றப்பட்டன.

இதனைத் தொடர்ந்து இராமேஸ்வரம் ரெயில்வே பீர் ரோட்டில் உள்ள லொறி மூலம் பொருள்கள் அனுப்பும அலுவலகம் ஒன்றிலிருந்து கைப்பற்றப்பட்ட பொதி ஒன்றில் இருந்து ரொக்கெட் ஏவுகணை ஒன்றும் கைப்பற்றப்பட்டது.


இது தொடர்பாக மாவட்ட திரா

(13ஆம் பக்கம் பார்க்க)

# இரு மாதங்களில் ஐந்து தடவைகள் ஒப்பந்தத்தைப் புலிகள் மீறினராம்!

## ஜனாதிபதியின் குற்றச்சாட்டு இது

கொழும்பு,ஒக்.14



கடந்த இரண்டு மாதங்களில் ஐந்து முக்கிய யுத்தநிறுத்த ஒப்பந்த மீறல்களில் புலிகள் ஈடுபட்டனர் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று நடைபெற்ற பாதுகாப்பு அதிகாரிகளுக்கான விசேட கலந்துரையாடல ஒன்றில் உரை நிகழ்த்துகையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களாக கிழக்கின் பாதுகாப்பு நிலைமை மிக மோசமான கட்டத்தை அடைந்துள்ளது. இக்காலப்பகுதியில் முக்கிய ஐந்து யுத்தநிறுத்த ஒப்பந்த மீறல்களில் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

இனக்கலவரங்களைத் தூண்டி விடுவதில் புலிகள் முக்கிய பங்காற்றி உள்ளார்கள். இனக்கலவரம் மூழ்வதைத தடுப்பதற்கு மாவட்ட மட்டத்தில் விசேட குழுக்களை அமைப்பது அவசியம்.

இந்தப் பகுதியில் ஏற்படக்கூடிய அசம்பாவிதங்களைத் தடுப்பதில் இத்தகைய குழுக்கள் தீவிரமாகச் செயற்படமுடியும்.

- இவ்வாறு ஜனாதிபதி மேலும் அங்கு தெரிவித்தார்.

இந்த விடயங்களை உள்ளடக்கிய அறிக்கை ஒன்றினையும் ஜனாதிபதி செயலகம் நேற்று வெளியிட்டுள்ளது.

## தென்னிலங்கையிலிருந்து
# பட்டமளிப்பு விழாவுக்கு வந்த சிறப்பு விருந்தினர் குழு!

யாழ்ப்பாணம்,ஒக்.14

நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில நடைபெற்ற 22 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் யாழ். பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் கல்விபயின்ற அறுவர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

1974 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யாழ்.பல்கலைக்கழகத்தின் தொடக்க காலத்திலிருந்து 1977 ஆம் ஆண்டு வரை கல்வி பயின்ற ஆறு பேரே நேற்றைய விழாவின்போது பிரசன்னமாகியிருந்தனர்.


கிங்ஸ்லி பேர்ணாட், டி.எம்.எஸ். திசாநாயக்க, ஏ.எம்.திலகரட்ண, யூட் பெர்னாண்டோ, ஆர்.எஸ்.மாரசிங்க, எம்.ஜி.டபிள்யூ.சுரவீர ஆகிய அறுவருமே இவர்களாவர். இவர்கள் ஆறு பேரும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்.

கலைப்பீடத்திலும் விஞ்ஞான பீடத்திலும் கல்விபயின்ற இவர்கள், 1977 ஆண்டு பொதுத் தேர்தலைத் தொடர்ந்து இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி இருந்தனர். அதன் பின்னர் ஏறக்குறைய 24 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளதையிட்டு தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாக அவர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## பட்டமளிப்பு விழாவில் சில காட்சிகள்....



பட்டம் பெறுவதற்கு கைலாசபதி கலையரங்கை நோக்கிச் செல்லும் மாணவர்கள்.




நேற்று யாழ்.பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின் படத் தொகுப்பு இது.
படங்கள்:அற்புதன்



குடை, கொடி, ஆலவட்டத்துடன் துணைவேந்தர் அழைத்து வரப்படுகிறார்.



துணைவேந்தர் உரை நிகழ்த்துகிறார்....



மாணவர் ஒருவருக்கு துணைவேந்தர் பட்டம் வழங்குகிறார்.



பட்டம் பெறக் காத்திருக்கும் மாணவர்கள்....



விரிவுரையாளர்களும் துறைத்தலைவர்களும்....



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மற்றும் சமய, சமூக பெரியோர்கள் முன் வரிசையில் அமர்ந்திருந்த காட்சி....



தமது பிள்ளைகள் பட்டம் பெறும் காட்சியை நேரில் காண அமர்ந்திருக்கும் பெற்றோர்கள்....

# கோலாகலமாக நடந்த பட்டமளிப்பு விழா!

யாழ்.பல்கலைக்கழகத்தின் 22 ஆவது பட்டமளிப்பு விழா நேற்றுக் காலை கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

காலை 9 மணிமுதல் ஐந்து அமர்வுகளாக நடைபெற்ற இந்தப் பட்டமளிப்பு விழாவில் மொத்தம் ஆயிரத்து 332 பேர் பட்டம் பெற்றனர்.

அமர்வுகள் யாவும் துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றன. முதலாவது அமர்வு காலை 9 மணிக்கு ஆரம்பமானது.

ஒவ்வொரு அமர்வுகளுக்கும் முன்னதாக பல்கலைக்கழக இராமநாதன் கட்டடத்துக்கு முன்பாகவிருந்து பட்டம் பெறும் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் துறைத் தலைவர்கள், பீடாதிபதிகள் ஆகியோர் கைலாசபதி கலையரங்குக்கு அழைத்து வரப்பட்டனர்.

துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை சம்பிரதாய பூர்வமாக குடை, கொடி ஆலவட்டங்களுடன் அரங்குக்கு அழைத்து வரப்பட்டார். கலையரங்கிற்குள் மங்கள வாத்தியங்கள் அவர்களை வரவேற்றன.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மற்றும் சமய, சமூக பெரியோர்கள் நேற்றைய பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டனர். விழாவில் சிலருக்கு கௌரவ கலாநிதிப் பட்டங்கள் வழங்கப்பட்டன.

பட்டம் பெறும் மாணவர்கள் சார்பாகவும் அவர்களது உறவினர்கள் தலா ஒவ்வொருவர் அரங்கிற்குள் அனுமதிக்கப்பட்டனர். ஏனைய உறவினர்கள் பட்டமளிப்பு விழா காட்சிகளை வெளியிலிருந்தவாறே பார்ப்பதற்கு வசதியாக வெளியில் சில இடங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கப்பட்டு அரங்க நிகழ்வுகள் நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்பட்டன.

நேற்று பட்டமளிப்பு விழாவிற்கு வருகைதந்தோரின் வாகனங்களின் நெரிசலால் இராமநாதன் வீதியில் போக்குவரத்துகள் அடிக்கடி ஸ்தம்பிதமடைந்தன. (ஜ-4-5)

# அதிகாலை வீடு புகுந்த சிப்பாய் குடும்பப் பெண்ணுடன் சேஷ்டை!

## குருநகர்ப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஒக்.14

அதிகாலைவேளை வீட்டினுள் நுழைந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த குடும்பப் பெண் ஒருவரின் கையைப் பிடித்து இழுத்திருக்கிறார். திடுக்குற்று விழித்துக்கொண்ட அந்தப் பெண், உரத்துக சத்தமிடவே, பெண்ணின் தலையில் தாக்கிவிட்டு சிப்பாய் ஓட்டமெடுத்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணியளவில், குருநகர் ஜெஸ்.ரோக் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய குடும்பப் பெண் ஒருவரே சிப்பாயால் தாக்கப்பட்டு தலையில் காயமடைந்துள்ளார்.

வீட்டுக்குள் நுழைந்த சிப்பாயை, அந்தப் பெண்ணின் கணவர் துரத்திச் சென்ற சமயம், சிப்பாய் இராணுவக் காவலரண் பகுதிக்குள்நுழைந்து மறைந்து கொண்டார் என்று கூறப்படுகிறது.

பிரஸ்தாப சிப்பாய் இதே போன்று, கடந்த வாரமும் நடந்து கொண்டதாக, அதே வீட்டில் வசிக்கும் ஜோன்சன் சகாயராணி (வயது 35) என்ற பெண் தெரிவித்தார். சம்பந்தப்பட்ட சிப்பாயை தன்னால் அடையாளங்காட்ட முடியும் எனவும் அவர் கூறினார்.

இச்சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறையினரிடமும், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் முறையிடப்பட்டுள்ளது. (ஐ-9)

# இந்தோனேசியாவில் குண்டுவெடிப்பு: வெளிநாட்டவர் உட்பட 182 பேர் பலி!

## அந்நாட்டின் வரலாற்றில் மிகமோசமான வன்முறை



இந்தோனேசியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கார்க் குண்டுவெடிப்பில் பலியானவர்களில் ஒருவரின் சடலம் மீட்டு எடுத்துவரப்படுவதை படத்தில் காணலாம்.

ஜகார்த்தா,ஒக்ரோபர்14

**இந்தோனேசியாவில் நேற்று முன்தினமிரவு கேளிக்கை விடுதியொன்றில் வாகனத் தரிப்பிடத்தில் கார்க் குண்டு வெடித்தது. இந்தச் சம்பவத்தில் 182பேர் உயிரிழந்துள்ளனர்; 200இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் வெளிநாட்டவர்களாவர். இந்தோனேசிய வரலாற்றில் மிகமோசமான வன்முறைச் சம்பவம் இதுவென கூறப்படுகிறது.**

இந்தோனேசியாவின் சுற்றுலாத் தீவான பாலியின் குடா நகரில் இருந்த 'சாரி' இரவு விடுதியின் வெளியே வாகனத் தரிப்பிடத்தில் சக்திவாய்ந்த கார்க்குண்டு வெடித்தது.

நேற்றுமுன்தினம் உள்ளூர் நேரப்படி இரவு 11.30 மணிக்கு இக்குண்டு வெடித்தது.

குண்டுவெடிப்பால் எழுந்த பெரும் தீச்சுவாலை 'சாரி' இரவு விடுதியை மட்டுமன்றி அக்கம் பக்கத்தில் இருந்த 'டிஸ்கோ' நடன விடுதிகள், சிற்றுண்டிச் சாலைகள், தங்கும் விடுதி ஆகியவற்றிலும் பரவிப் பற்றியெரிந்தது.


அத்துடன் வீதியில் நெருக்கமாக வரிசையாக நிறுத்தப்பட்டிருந்த கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களிலும் பரவிய தீச்சுவாலை சுவர் போன்று எழுந்து எரிந்தது. இதனால் எரிந்த கட்டடங்களுக்குள் இருந்தவர்கள் வெளியேறமுடியாது தீக்குள் சிக்கிக்கொண்டனர்.

இந்தக் குண்டுவெடிப்பு மற்றும் தீ விபத்தில் 182பேர் கருகி இறந்துள்ளனர்; 210பேர் வரை பலத்த எரிகாயங்களுடன் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இறந்தவர்களில் 75சதவீதமானவர்கள் ஆஸ்திரேலியா, பிரிட்டன், ஜேர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. இறந்தவர்களின் சடலங்களில் பெரும்பாலானவை கருகி அடையாளம் காணமுடியாத அளவுக்கு சிதைந்துபோயுள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்தோனேசிய வரலாற்றில் மிக மோசமான குண்டுவெடிப்புச் சம்பவம் இதுவென்று பொலீஸ்மா அதிபர் ஜெனரல் டாய் பஜ்டியார் தெரிவித்தார்.

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கு எவரும் உடனடியாகப் பொறுப்பேற்கவில்லை. ஆயினும் மேற்குலகத்தவருக்கு எதிரான தாக்குதலாகவே இது கருதப்படுகிறது.

இதேசமயம் பாலிதீவில் உள்ள அமெரிக்க ஆலோசனை அலுவலகம் அருகேயும் நேற்று முன்தினமிரவு குண்டொன்று வெடித்தது. இதில் எவரும் காயமடையவில்லை. (ஒ)



குண்டுவெடிப்பை அடுத்து பற்றி எரியும் தீச்சுவாலை.

## சென்னையில் ரஜனிகாந்த் 9மணிநேர உண்ணாவிரதம்

சென்னை,ஒக்.14

தமிழகத்தில் வறட்சியால் வாடும் நெற்பயிருக்கு உடனடியாக கர்நாடகத்திலிருநது காவிரி நீர்விடக் கோரி நடிகர் ரஜனிகாந்த் நேற்று 9மணி நேர உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்.

சென்னையிலுள்ள சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை எதிரே காலை 8 மணிக்கு உண்ணாவிரதம் தொடங்கியது. ரஜனி வெள்ளை குர்தா மற்றும் பைஜாமா அணிந்து உண்ணாவிரதத்துக்கு வந்திருந்தார். அவருடன் நடிகர் விஜயகுமார், அப்பாஸ், அர்ஜுன் மற்றும் இசையமைப்பாளர்கள் கணேஷ் மற்றும் கங்கை அமரன் ஆகியோர் கலந்துகொண்டனர். அப்பாஸ், அர்ஜுன் ஆகியோர் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர்களாவர். உண்ணாவிரதத்தை முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் ஆரம்பித்து வைத்தார்.

உண்ணாவிரதப் போராட்டத்திற்குப் புறப்படும் முன் தனது இல்லத்தில் செய்தியாளர்களிடம் பேசிய ரஜனிகாந்த், உச்சநீதிமன்ற ஆணைப்படி காவிரி நீரை கர்நாடகத்திலிருந்து தமிழகத்திற்கு உடனடியாக விடுவிக்கக்கோரி உண்ணாவிரதம் இருக்கப் போவதாகக் கூறினார். (ஒ)

## ஹங்கேரி எழுத்தாளருக்கு நோபல் பரிசு

ஸ்டாக்ஹோம்,ஒக்.14

இந்த ஆண்டு, ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர் இம்ரே கெர்தீஸ்'க்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

சுவீடன் நாட்டின் தலைநகர் ஸ்டாக்ஹோமில் டிசெம்பர் 10ஆம் திகதி நடைபெறும் விழாவில் அவருக்கு சுமார் ரூ.10கோடி ரொக்கமும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்.

ஜேர்மனிய சர்வாதிகாரி ஹிட்லரின் உத்தரவின் பேரில், ஹங்கேரியில் யூதர்களைச் சித்திரவதை செய்ததை நேரில் பார்த்தவர் இம்ரே. அப்போது அவர் சிறுவன்.

சமுதாய சக்திகளுக்கு உட்பட்டே மனிதகுலம் வாழ்ந்தாக வேண்டிய இன்றைய சூழ்நிலையிலும் தனித்துவமாக மனிதன் சிந்திப்பதற்கும் வாழ்வதற்கும் உள்ள வாய்ப் புகளை ஆராய்கிறது அவரது எழுத்து என்று நோபல் பரிசுத் தேர்வுக் குழு தனது பாராட்டுரையில் குறிப்பிட்டுள்ளது. (ம)

## தனது தூதரகங்களுக்கு அமெரிக்கா எச்சரிக்கை!

வாஷிங்ரன்,ஒக்.14

வெளிநாடுகளில் செயல்படும் அமெரிக்கத் தூதரகங்கள் மீது அல்கெய்டா தீவிரவாதிகள் புதிதாகத் தாக்குதல் நடத்தும் அபாயம் உள்ளது. எனவே பாதுகாப்பு விடயத்தில் மிகுந்த கவனத்தை அவை கையாளவேண்டும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக அவற்றை உஷார்படுத்தி அமெரிக்கா செய்தி அனுப்பியுள்ளது. இத்தகவலை வெளியுறவு அமைச்சக அதிகாரி தெரிவித்தார். சர்வதேச தீவிரவாதி பின்லேடன மற்றும் அவரது கூட்டாளி அய்மான் அல்ஜவாஹரி ஆகியோரது ஒலிநாடாக்கள் பற்றி தகவல் வந்துள்ளது. அவற்றில் உள்ள விடயம் தாக்குதல் பற்றிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே பாதுகாப்பு விடயத்தில் மிகவும் அதிகபட்ச உஷார்நிலை அவசியமாகும் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

இதனிடையே, உஷார் நிலை அவசியம் என உள்நாட்டு அமைப்புகளுக்கு அமெரிக்க மத்திய புலனாய்வு அமைப்பு (எப்.பி.ஐ.) எச்சரிக்கை செய்துள்ளது என்று வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் எரி பிளஷர் குறிப்பிட்டுள்ளார். (ஒ)

## கூட்டணி அரசு அமைக்க பெனாஸிர் முயற்சி

இஸ்லாமாபாத்,ஒக்.14

பாகிஸ்தானில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் அதிபர் பர்வேஷ் முஷாரப்பின் கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. ஆகவே அக்கட்சி பாகிஸ்தானில் அரசு ஒன்றை அமைக்க வாய்ப்பு கிட்டியுள்ளது.

இதேசமயம் -

முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ எதிர்க்கட்சிகள் அனைத்தையும் ஒன்றுதிரட்டி கூட்டணி அரசு ஒன்றை அமைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ள தாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ)

### கலையுலகின் காவிரிப் போராட்டம்

## 'தமிழ் மண் தமிழனையே ஏற்கும்' இயக்குநர் பாரதிராஜா ஆவேசம்!

நெய்வேலி,ஒக்.14

'வந்தாரை வாழவைக்கும் தமிழகம் இனி இந்த மண்ணின் மைந்தர்களைத்தான் ஏற்றுக்கொள்ளும்' என்று கலையுலகக் காவிரி போராட்டக் குழுத் தலைவர் இயக்குநர் பாரதிராஜா உணர்ச்சிபூர்வமாகக் கூறினார்.

தமிழ்த் திரையுலகம் சார்பில் தமிழகத்தின் நெய்வேலியில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் பேசியதாவது:

'தமிழன் உணர்ச்சிவசப்படுபவன். உணர்ச்சியில்தான் உறுதி இருக்கும். உணர்ச்சி மழுங்கிப் போனதால்தான் கால்நூற்றாண்டு காலமாக உரிமையை உணராமல் உள்ளோம். காவிரிப் பிரச்சினை 70 ஆண்டுகால பிரச்சினை. அது தற்போதுதான் உசசக் கட்டத்தில் உள்ளது. 'இனப்பிரச்சினை வெறும் நதிப் பிரச்சினை அல்ல. இனப பிரச்சினை தமிழன் அன்றே விழித்தெழாததால் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குக் கர்நாடகம் கட்டுப்படாதது அடாவடித்தனம். கர்நாடகம் அண்டை மாநிலமா, அண்டை நாடா? தமிழர்கள் கண்ணியமானவர்கள் என்பதற்கு அமைதியான முறையில் இப்பேரணி நடந்து முடிந்துள்ளதே சான்று.

கன்னடக் கலைஞர்களாக இருந்த போதிலும் பேரணியில் கலந்து கொண்ட நடிகர்கள் அர்ஜுன், முரளி பாராட்டுக்குரியவர்கள். நாகரிகமானவன் தமிழன். அதனால்தான் காவிரிப் பிரச்சினையில் அறவழியில் போராடுகிறோம்.

நெய்வேலி மின்சாரம் கர்நாடகத்துக்குச் செல்வதைத் தடுத்துவிட்டால் மட்டும் கர்நாடகம் தமிழகத்துக்குக் காவிரி நீரைத் திறந்துவிடுமா?

### உலக அரங்கில்

என்று கேட்டுள்ளார் ரஜினி.

சென்னையில் உண்ணாவிரதம் இருந்தால் மட்டும் காவிரி நீர் தமிழகத்துக்கு வந்துவிடுமா? நமது தார்மீக உணர்வை வெளிப்படுத்தவே இப்போராட்டம்.

ரஜினியின் உண்ணாவிரதத்துக்கு வாழ்த்துக் கூறியுள்ளார் கர்நாடக முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணா. ஆனால், தமிழ்த் திரையுலகம் நெய்வேலியில் நடத்தும் போராட்டம் குறித்து எதுவும் கூறவில்லை. கிருஷ்ணாவுக்கும் ரஜினிக்கும் இடையில் என்ன மறைமுக உறவு? தமிழன் இன்னும் விழிப்படையாவிட்டால் அது மடத்தனம். தமிழனைப் பிரித்தாளும் முயற்சி நடக்கிறது. காவிரிப் பிரச்சினைக்காகப் போராடினால் கர்நாடகத்தில் உள்ள 40 லட்சம் தமிழர்களையும் நினைத்துப் பார்க்கவேண்டும் என்று சிலர் பைத்தியக்காரத்தனமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஏன்? தமிழகத்தில் கன்னடர்கள் இல்லையா? எதிரிகளை மன்னிக்கலாம். ஆனால், துரோகிகளை மன்னிக்கமுடியாது.

'போராட்டத்தின்போது வன்முறை நிகழலாம் என்று கருணாநிதி கூறுகிறார். அவர் எங்களுக்கு தந்தையைப் போன்றவர். எமது போராட்டத்துக்கு அவர் ஆதரவளிக்க வேண்டாமா?' என்றார். (ஒ)



போராட்டத்தின் முடிவில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் திரையுலகினர் மகஜர் கையளித்த காட்சி.

## 'தமிழர் பெருந்தன்மையை சீண்டாதீர்' நடிகர் விஜயகாந்த் வேண்டுகோள்!

நெய்வேலி,ஒக்.14

'தமிழரின் பெருந்தன்மையைச் சீண்டிப் பார்க்காதீர்கள்' என்று தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் விஜயகாந்த் எச்சரித்தார்.

தமிழகத்தில் தமிழ்த் திரையுலகம் சார்பில் நெய்வேலியில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அவர் பேசிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கர்நாடகத்தில் எந்தத் தமிழ் கதாநாயகரும் இல்லை. ஆனால், தமிழ்த் திரையுலகில் எத்தனை கன்னட கதாநாயகர்களை வாழ வைக்கிறோம்? வீரம் விளைந்தது தமிழக மண். தேவையில்லாமல் கர்நாடகத்தில் 40 லட்சம் தமிழர்கள் உள்ளனர் என்று பிரச்சினையைத் திசை திருப்பக்கூடாது. தமிழகத்திலும் கன்னடர்கள் இருப்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

காவிரி பிரச்சினையை அரசியலாக்கி மக்களை முட்டாள்களாக்கிக் கொண்டிருக்கிறார்கள் அம்மாநில அரசியல்வாதிகள். தமிழ் உணர்வு மங்கிவிடக்கூடாது. எந்த மொழியை வேண்டுமானாலும் கற்கலாம். ஆனால், தமிழை மறக்கக் கூடாது. பொதுப் பிரச்சினைகளில் சாதி, மதம், அரசியல் பார்க்காமல் ஒற்றுமையாக இருக்கவேண்டும் - என்றார் விஜயகாந்த். (ஒ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லின ஆடுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வே.ஸ்ரீபாலன், இல. 10, கல்லூரி வீதி, கொக்குவில் கிழக்கு. (9347)

கொக்குவில் மேற்கில் 6 பரப்பு தென்னந்தோட்டம் விற்பனைக்கு உண்டு. வீடும் கட்டலாம். வே.ஸ்ரீபாலன், இல.10, கல்லூரி வீதி, கொக்குவில் கிழக்கு. (9346)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, பிரம்படி லேனில் உள்ள 'புளியங்கிணற்றடியும் எச்சாட்டியும்' என்ற இடத்தில் 2பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.முகுந்தன் (ஆச்சிகடை), வன்னியசிங்கம் வீதி, இணுவில் தெற்கு (9408)

## எங்கள் நாடு

எங்களது இன்றைய வாழ்க்கையைச் சித்திரிக்கின்ற நாடகங்களையும், வானொலி நாடகங்களையும் எழுதிப் பழகுவதற்குப் பயன்படக்கூடிய ஒரே ஒரு நூல், 350 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல். ரூபா 75/- (9406)

## மணமக்கள் தேவை

யாழ்.கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1972இல் பிறந்த 5'4 1/2" உயரமும், அழகிய தோற்றமும், உயர்கல்வியும், கணனித்துறையிலும் கல்விகற்ற மணமகளுக்கும், 1975இல் பிறந்த, 5'11" உயரமுடைய, பொறியியலாளர் மணமகனுக்கும் தகுந்த டாக்டர், எஞ்சினியர், விஞ்ஞானப் பட்டதாரி மணமக்கள் தேவை. தொடர்பு: ஸ்ரீ இராகவேந்திரா, 159, கோவில் வீதி, நல்லூர். (9390)

## மணமகன் தேவை

31வயது, படித்த, அழகிய, சைவ போசன மணமகளுக்கு வெளி நாட்டில் தொழில் பார்க்கும் மணமகன் தேவை. விளம்பர இல.1670,மே/பா உதயன். (9349)

## மணமகள் தேவை

படித்த, சொந்த வியாபாரம் செயயும், இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு 33 வயதுக்குட்பட்ட, உத்தியோகம் பார்க்கும் மணமகள் தேவை. விளம்பர இல.1669, மே/பா உதயன். (9348)

## இசை வகுப்புகள்

ஓர்கன், கிற்றார், ஹார்மோனியம், மெலோடிக்கா ஆகியவற்றின் சுபநேர வகுப்புகள் நாளை (15.10.2002) செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணி (புதிய நேரம்) நடைபெறும். புதியவர்களும் இணையலாம். தொடர்பு: R.கீதன், இல. 691, ஸ்ரேசன் வீதி, கோண்டாவில். (9394)

## வீதித்திருத்தம் இல்லை; மக்கள் சிரமம்

நெடுந்தீவு வெட்டுக்களியில் இருந்து குருக்கள் மடம் வரையிலான பிரதான வீதியின் ஒருபகுதி இதுவரை புனரமைக்கப்படாமையினால் மேற்படி வீதியினூடாகப் பயணஞ்செய்யும் பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

தற்சமயம் மிகவும் மோசமான நிலையிலுள்ள இந்தவீதி பருவமழை ஆரம்பித்திருப்பதை அடுத்து மேலும் சேதமடைந்துள்ளது.

பஸ் மற்றும் துவிச்சக்கரவண்டிகள மாத்திரமன்றி பாதசாரிகள் கூட இந்தப் பாதையைப் பயன்படுத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பிரதான வீதியின் புனரமைப்புக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையே பொறுப்பு என நெடுந்தீவு பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-111)

## சுயதொழில் வாய்ப்பு

### இலகுமுறை பிறிண்ரிங்

இயந்திரம் இன்றியே சிறு தொகைப் பணத்தினைக் கொண்டு உங்கள் வீட்டிலேயே வாழ்த்து மடல், துண்டுப் பிரசுரம், தலையணை உறை, ரீ சேட் போன்ற இன்னும் பலவற்றில் வர்ண பிறிண்ரிங் செய்ய உங்களுக்கு வசதியான நேரம், நாளில் பயிற்சிநெறி.

*தொடர்பு:*

*யாழ்ப்பாணத்தில்:*

**நாவலர் கல்வி நிலையம்,**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

*வடமராட்சியில்:*

**சிவம்ஜி உடுப்பிட்டி,**
றஜனி பீடாக்கடை அருகில்.

(9433)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/நெல்லியடி
மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன்
பாடசாலையைச் சேர்ந்த மாணவன்

## செல்வன் இரவீந்திரன் நிலோஷன்

அவர்கள் 2002ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்று பாடசாலையில் முதலாம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் 46ஆவது இடத்தையும் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவரை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்கள் ஆகியோருக்கு நன்றி கூறுகிறோம். அவர் கல்வியில் மேலும் சிறப்புற எல்லாம்வல்ல வெல்லன் விநாயகரை வேண்டுகிறோம்.

அப்பா, அம்மா, அண்ணா, தங்கை,
அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா,
சித்தப்பாமார், சித்திமார், மாமாமார்,
மாமிமார், நண்பர்கள், அயலவர்கள்.

*கரணவாய் கிழக்கு,*
*கரவெட்டி.* (9438)

# 30ஆவது ஆண்டு

## ஆண்டவரின் அறுவடைப் பணியில்

## போதகர் J.K.பிலிப்


1972.10.14 2002.10.14



பரமனின் அழைப்பைக் கேட்டு
பரிதவித்த யாழ்ப்பாணத்தில் பாஷைதெரியாமலே
பரமனின் சித்தத்தை நிறைவேற்ற
அனுப்பப்பட்ட ஜோசாயாவே (J.K.பிலிப்)
உம் பணிகள் 30 ஆண்டுகள் அல்ல
மூவொரு தேவனின் வருகை மட்டும்.
எம் போதகரே! உம்பணி தொடரட்டும்;
எழுப்புதல் இத்தேசத்தில் மலரட்டும்.
ஆமேன் அல்லேலூயா!

(9366) - உங்கள் பிள்ளைகள்.

# 45ஆவது நினைவு நாள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1978 | 2002 |
| - | - |
| 12 | 08 |
| - | - |
| 24 | 31 |

## அமரர் இராசன் சிவகுமார்

(தொண்டைமானாறு)

மலரும் உன் வதனம் - அதை
மறவாது எம் இதயம்!
ஒளிவீசும் உன் கண்கள் - அது
ஒருபோதும் மறவாது எமக்கு!
பொதுப்பணி அது உன் பணிபோல
பொறுப்புடன் செயலாற்றிடுவாய்!
உயிரிலே கலந்த நண்பா!
உன்திறன் நாம் மறவோம்.

ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கும்:
ஆருயிர் நண்பர்கள்
வதனம், ரங்கன், சுமன்.

*தொண்டைமானாறு.* (9337)

# நல்லாசான் எம் மதிப்பிற்குரிய சபா.மாஸ்ரர்



"குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
மலை நிகர் மாட்சியோடு அலைதுணையில்லா"

பன்மொழி நல்லாசிரியரும் **பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை** அவர்களின் நல்மாணவரும் மௌனதவமுனிவர் **பொ.கைலாசபதி** அவர்களின் ஞானச்சுடர் பெருமையுணர்ந்து அவர்களின் வழியில் சைவ உலகிற்குத் தன்னை அர்ப்பணித்துப் பணிபுரியும் சமூக சேவையாளர்

**திரு.ஆ.சபாரத்தினம்** அவர்கள்

யாழ்.பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட கௌரவ முதுமாணி (M.A.) பட்டம் பெற்றதை உளமகிழ்வுடன் அவர் பணி மேலும் தொடர இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

இ.கந்தையர் (ஆசிரியர்),
பரத்துவாசன், முகுந்தன்,
இளங்கோவன், கலாவல்லி,
பாலசுப்பிரமணியம்.

*மேலைக்கரம்பனூரான்,*
*No.8. இராச வீதி,*
*நல்லூர்.*

**வள்ளுவர் பழப்பகம்,**
198, Avenue De La Division
93430, Villetaneuse,
France. (9436)

# மூன்றாம் ஆண்டு நிறைவினில்...



| அன்னை மடியில் | கடலின் மடியில் |
|---|---|
| 28 | 14 |
| - | - |
| 01 | 10 |
| - | - |
| 1980 | 1999 |

## கடற்கரும்புலி கப்டன் சுதாகரன்/சுதாகர்

(இராசநாயகம் பிரசன்னா)

அன்னை மடியில் தவழ்ந்த நீ
கடலின் மடியில் காவியமாகி
காற்றில் கலந்த பேரோசையானாய்!
காலனவன் உனைக் கவர்ந்த
சேதியினை செவியோரம் கேட்டு
விழிகரைய விம்மி நின்றோம் - அன்று
கதறியழ முடியவில்லை!
துயரமதை அடைகாத்து
இதயமதில் பொத்தி வைத்தோம்!
எம்மகத்தில் எங்கெங்கு காணினும் - இன்று
உன் நினைவுப் பூக்களே பூத்துக் கிடக்கின்றன!

இன்றையநாளில் உன் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

*39/6, மூத்த விநாயகர் வீதி,*
*கச்சேரி நல்லூர் றோட் , யாழ்ப்பாணம்.* - குடும்பத்தினர்

(9435)

# மரண அறிவித்தல்கள்

## அகஸ்தீன்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

கரம்பனைப் பிறப்பிடமாகவும், சில்லாலையை வதிவிடமாகவும் கொண்ட அகஸ்தீன்பிள்ளை அந்தோனிப்பிள்ளை அவர்கள் நேற்றுமுன்தினம் (12-10-2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் விக்ரோறியா (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் யோசவ் குணசீலன் (கதிரைமாதா ஆட்டோ, சில்லாலை), சில்வியா நிர்மலா (ஆசிரியை, றோ.க.த.க.பாடசாலை, சில்லாலை) யூட்பெல்சியா (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் அன்ரனி பிறாங்க் திருக்குமாரன் (யாழ்.பல்கலைக்கழகம்), மேரி றோஸ் நிர்மலா (சில்லாலை) ஆகியோரின் அன்பு மாமனும் நிறோஷா, ஜெறோஷா, ஜெனோஷா, சனோஷா, ரிறோன், பெலிக்ஸ், பெலினி ஆகியோரின் அன்புப் பேரனும் மனுவேல்பிள்ளை (இளவாலை), காலஞ்சென்ற சில்வெஸ்ரர் செல்வராசா (வட்டுக்கோட்டை), காலஞ்சென்ற பவுலீனம்மா தேவசகாயம் (இளவாலை), றெஜீனா அந்தோனிப்பிள்ளை (குருமன்காடு), றீற்றா அந்தோனிப்பிள்ளை (செட்டிகுளம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும பெனடேற் அந்தோனிப்பிள்ளை (கனடா), அந்தோனிப்பிள்ளை (இளைப்பாறிய பதில் ஆணையாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம்), மரியம்மா யுவக்கீன்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை, புலோலி), காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை (இளைப்பாறிய உத்தியோகத்தர், ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்.), அன்னம்மா அந்தோனிப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை, சில்லாலை), காலஞ்சென்ற கபிரியேல்பிள்ளை (கிராம சேவையாளர், சில்லாலை), மற்றில்டாராணி (சிலலாலை), செலஸ்தீன்பிள்ளை (மெய்கண்டான் அச்சகம், கொழும்பு), பற்றிக் இம்மனுவேல் (சில்லாலை) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14-10-2002) திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்குச் சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலியைத் தொடர்ந்து சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்

'செல்வ இல்லம்'
சில்லாலை. (9420)

## வீரவாகு நடராஜா

(ஓய்வுபெற்ற நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர்)

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வீரவாகு நடராஜா 12-10-2002 சனிக்கிழமை கொழும்பில் அன்னாரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் ஜெகசோதியம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்வராஜா, சிவயோகராஜா (பிரான்ஸ்), சிவசேனாதிராஜா J.P. (கொழும்பு), சிவநேசராஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் யோகராஜா, நிமலராஜா, குணாளராஜா, ஜெகித்தா, சிறிஸ்கந்தராஜா, துர்க்கா, கணேசராஜா, கோனேசராஜா, லக்ஷ்னா, சிந்துஜா, கௌதம் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளைமறுதினம் (16-10-2002) புதன்கிழமை பிற்பகல் 1.00மணிக்கு பொரளை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திருமதி ந.ஜெகசோதியம்மா,
18 3/4, கொலிங்வூட் பிளேஸ்,
கொழும்பு - 6.
தொலைபேசி 364587 (9437)

**வே.கண்ணபிரான்** (தம்பி),
'கிருஷ்ணஜோதி',
பங்குரு வீதி,வட்டு. தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

உதயன்

## தமிழ் உணர்வை துறக்கலாமா?

'காஞ்சிரங்குடா அதிரடிப் படை முகாம் சூழலில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மற்றும் திருகோணமலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் என்பவற்றில் நிகழ்ந்த உயிரிழப்புகள் கண்டு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.' - இப்படி ஈ.பி.டி.பி. ஓர் அறிக்கை மூலம் தெரிவித்திருக்கின்றது.

'மக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்தி படையினரின் ஆத்திர உணர்ச்சி தூண்டப்பட்டமை இந்தக் கொடூரச் சம்பவங்களுக்கு அடிப்படையாகும்' என்றும் ஈ.பி.டி.பி. தெரிவித்திருக்கின்றது.

'திருக்கோயில் காஞ்சிரங்குடாப் பகுதி சம்பவத்துக்கு புலிகளே நேரடியாகப் பொறுப்பு. அவர்களே மக்களைத் தூண்டிவிட்டு அதிரடிப்படையினரின் ஆத்திர உணர்வைத் தட்டிவிட்டு அனர்த்தங்கள் நேரக் காரணமாயினர்' - என்ற சாரப்பட ஈ.பி.டி.பி. அறிக்கை அமைந்துள்ளது.

இவ்வாறு எதிரெதிர் நிலையில் உள்ள அரசியல் கட்சிகள், அமைப்புக்கள், ஊடகங்கள் நடந்து முடிந்த சம்பவங்களுக்கு மற்றைய தரப்பு மீது குற்றம் சுமத்தி அரசியல் லாபம் தேடுவது வழமை.

அந்தந்தத் தரப்பினர் தாம் சார்ந்த பக்கத்தின் நிலைப்பாட்டுக்கு ஏற்ப சம்பவங்களைத் திரித்து, வியாக்கியானம் செய்து பிரசாரத்தில் ஈடுபடுவது நடப்பதுதான்.

இத்தகைய விடயங்களில் பொதுத் தரப்பினரின் அவதானிப்பும் கணிப்பீடும்தான் கவனத்தில் எடுக்கப்படவேண்டும். அதுதான் ஓரளவுக்கேனும் சரியானதாகவும் நியாயமானதாகவும் இருக்கும்.

காஞ்சிரங்குடா தாக்குதல் குறித்துப் பூர்வாங்க விசாரணை நடத்திய கண்காணிப்புக் குழு, முகாம் மீது மக்கள் கூட்டம் தாக்குதல் நடத்தியது குறித்து விடுதலைப் புலிகளின் தலைமை முன்னரே அறிந்திருந்தது என்பதைச் சுட்டிக்காட்ட எதுவுமில்லை என்று குறிப்பிட்டுள்ளது.

'காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாம் பகுதியில் நடந்தது பொதுமக்களின் தன்னியல்பான எழுச்சி என்பதை அரசியலரங்கில் செயற்படும் எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்' என்று ஈ.பி.டி.பி. குறிப்பிட்டிருக்கின்றது.

புலிகளே தமது ஏகபிரதிநிதிகள் என்பதைத் தமிழர்கள் திட்டவட்டமாக - தெளிவாக - வெளிப்படுத்திவிட்டனர். இந்நிலையில் தங்களின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள், நிராயுத பாணியாக அரசியல் பணியில் ஈடுபடும் சமயத்தில் படையினரால் தாக்கப்படுகின்றனர். இதற்கு எதிராக மக்கள் கொதித்து எழுவதில் என்ன ஆச்சரியமிருக்கின்றது? அத்தகைய எழுச்சியை தன்னியல்பானது என்று யாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என ஈ.பி.டி.பி. கூறுவதுதான் விந்தையானது.

கிளர்ச்சியுற்ற மக்கள் அதிரடிப்படை முகாமுக்கு முன்னால் திரண்டனர் என்பது உண்மை. அவர்கள் முகாம்மீது தாக்குதல் நடத்தினார்களா, வன்முறை புரிந்தார்களா அல்லது மக்கள் கூட்டம் மீது அதிரடிப்படை தானாகவே தாக்குதல் நடத்தியதா என்பதுதான் சர்ச்சைக்குரியதாக இருக்கின்றது.

திருகோணமலையைப் பொறுத்தவரை அங்கு அமைதியான ஹர்த்தால் அனுஷ்டித்த தமிழர்கள் மீது பெரும்பான்மைச் சிங்களவர்கள் தாக்குதல் நடத்தினார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

அந்தச் சம்பவங்களையும் "மக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்தி படையினரின் ஆத்திர உணர்ச்சிகள் தூண்டப்பட்டமை இந்தக் கொடூரச் சம்பவங்களுக்கு அடிப்படை" என்று ஈ.பி.டி.பி. விமர்சித்திருப்பது ஆச்சரியத்தைத் தருகின்றது.

சர்ச்சைக்குரிய - தமிழர் தாயகமான - திருகோணமலையில் அஹிம்சை முறையில் தமது எதிர்ப்பைக் காட்ட முயன்ற தமிழர்கள்மீது கிரனேட் வீசி, துப்பாக்கி வேட்டுக்கள் தீர்த்து தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. அதுவும் சிங்களப் பேரினவாதிகள் நடத்திய இனவாதத் தாக்குதல்கள் அவை.

இத்தகைய கொடூரச் செயல்களை எந்தத் தமிழனும் கொதித்தெழுந்து கண்டிப்பதுதான் இன உணர்விலான அவனது கடமையாகும்.

இனக் கலவரப் பாணியில் தமிழர்கள்மீது ஏவிவிடப்பட்ட இந்தத் தாக்குதலை - கட்சிகளுக்கிடையிலான -- அரசியல் கருத்து வேறுபாட்டுக்காக வேறு விதத்தில் விமர்சிப்பது விநோதமானது.

அதுவும் 'ஈழம்', 'மக்கள்' என்ற பெயர்களை முன்வைத்து அரசியல் நடத்தும் கட்சிக்கு இது கேவலத்தையே ஏற்படுத்தும்.

அரசியல் கருத்து வேறுபாடுகளுக்காக தமிழ் பேசுவோர் தமிழ் உணர்வைத் தொலைத்துவிடக் கூடாது.

## நியமனங்கள் வழங்கக் கோரி

# வேலையற்ற பட்டதாரிகள் அமைச்சருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஒக்.14

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம், தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவுக்கு 6 கோரிக்கைகள் அடங்கிய கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்.மாவட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகளாகிய நாம் கடந்த காலங்களில் தொடர்ந்து கொண்டிருந்த யுத்தம் என்னும் கோரப்பிடியின் மத்தியில் சிக்கி பல இன்னல்களுக்கு மத்தியில் பல்கலைக்கழகங்களில் படித்து பட்டம் பெற்று வெளியேறி கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக எவ்வித வேலைவாய்ப்பும் இன்றி பரிதவித்துக்கொண்டிருக்கின்றோம். இவ்வேளையில் அரசிற்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பல தடவைகள் எமது அவலங்களை எடுத்துக்கூறியபோதும் எவ்வித பயன்களும் ஏற்படவில்லை.

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் சுமார் ஆயிரத்து 800 இற்கு மேற்பட்டவர்கள் அங்கத்தவர்களாகவுள்ளனர். இவர்கள் 1998, 1999, 2000, 2001ஆம் ஆண்டுகளில் பட்டம் பெற்று வெளியேறி இதுவரை எந்தவித வேலை வாய்ப்புக்களும் இன்றி இருக்கின்றார்கள். ஏனைய மாவட்டங்களில் உள்ள பட்டதாரிகள் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகவுள்ள நிலையில் யாழ். மாவட்ட பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு எதுவும் கிடைக்கக் கூடிய வழிகள் இல்லை என்பது யாவரும் அறிந்ததே. அரசினால் வழங்கப்படுகின்ற நியமனங்களில்கூட காலதாமதம் ஏற்படுகின்றது. அத்துடன் ஏற்கனவே நிரந்தர பட்டதாரி நியமனத்தில் உள்ளவருக்கும் அண்மையில் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டதனால் பட்டதாரிகள் வேலைவாய்ப்பற்று இருக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றனர். மேலும் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் நீண்டகாலமாக பட்டதாரி வெற்றிடங்கள் நிரப்பப்படாது இருக்கின்றன. ஆகவே பின்வரும் கோரிக்கைகளை தங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டும் இதுவரை வழங்கப்படாத இளைஞர் சேவை உத்தியோகத்தர் வெற்றிடத்தை நிரப்புதல்.

நிரப்பப்படாது இருக்கும் சமுர்த்தி முகாமையாளர் வெற்றிடங்களை நிரப்புதல்.

வடக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சினால் மிகுதியாக வழங்கப்படாமல் இருக்கும் ஆசிரியர் நியமனத்தை உடனடியாக வழங்குவதுடன் வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

வடக்கு - கிழக்கு மாகாண திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களிலுள்ள பட்டதாரி வெற்றிடங்களை நிரப்புதல்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புமுகமாக நடத்தப்பட்ட இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை முடிவுகளை வெளியிட்டு உடனடியாக நியமனத்தை வழங்குதல்.

தர்ண அருண பட்டதாரி தொழில் பயிற்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

மேற்குறிப்பிட்ட எமது கோரிக்கைகளுக்கு உடனடியாக சாதகமான பதில் தந்து யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் துயரங்களை தீர்க்கும்படி கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது.

(ஓ)

# கோழி நோய்த் தடை மருந்துக்கு தொடர்ந்து நிலவும் தட்டுப்பாடு

## அதிகாரிகள் அசிரத்தையே காரணமாம்

அச்சுவேலி,ஒக்.14

யாழ்.மாவட்டத்தில் கோழி நோய்த்தடை மருந்துகளுக்கான தட்டுப்பாடு தொடர்ந்து நிலவுவதால் தனியார் விற்பனையாளர்களிடம் மிகக்கூடிய விலையில் மருந்துகளைப் பெறவேண்டிய நிலை தொடர்கின்றது என கோழிப்பண்ணையாளர் கவலை தெரிவிக்கின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மருந்துகளை எடுத்துவருவதில் காட்டும் அசிரத்தையே இத்தட்டுப்பாட்டுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

கோழி நோய்களுக்கான தடை மருந்துகள் 12 பிராந்திய கால்நடை வைத்தியர் அலுவலகங்கள் மூலமும் யாழ்நகரில் உள்ள கால்நடை வைத்தியசாலையிலும் வாரந்தோறும் வழங்கப்பட்டு வந்தன. கோழி வளர்ப்போர் பொருத்தமான அளவுகளில் மருந்துகளை உரியகாலத்தில பெற்றுப் பயன்படுத்தி வந்தனர்.

கோழிக்குஞ்சுகள் பொரித்த தினத்திலிருந்து குறித்த தினங்களில் தடைமருந்துகள், குடிதண்ணீர் மற்றும் ஊசிமூலம் செலுத்தப்படவேண்டும். தடை மருந்து கொடுக்காதவிடத்து பெருமளவில் கோழிகள் இறந்துவிடநேரிடும்.

கோழி நோய்த்தடை மருந்துகள் ஆயிரம் கோழிகளுக்குரிய அளவிலான ஒரு தொகுதியாக உள்ளடக்கப்பட்டுள்ளன. அதனை ஒரே தடவையில் முழுவதுமாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்பட்டிருக்கும் மருந்துகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு ஒருமணி நேரத்துக்குள்ளே பயன்படுத்துதல் அவசியமாகும்.

இந்தச் சூழ்நிலையில் பல மாதங்களாக யாழ்.மாவட்டத்தில் கோழி நோய்த்தடை மருந்துகளுக்கு நிலவும் தட்டுப்பாடு கோழிப் பண்ணையாளர்களை பெருமளவில் பாதித்துள்ளதாக கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

(ஓ-11)

### நல்லூர் பிரதேச செயலர் பிரிவில்

## உதவி வழங்குவதில் பாரபட்சம்; மீளக்குடியமர்ந்தோர் விசனம்!

வலி.வடக்கு,ஒக்.14

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பட்டினிக்கு எதிரான இயக்கத்தினால் வன்னியில் இருந்து வந்தவர்களில் ஒரு பகுதியினருக்கு மட்டும் உலர் உணவுப் பொருள்கள் அல்லாத உதவிப் பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டும், மற்றொரு பகுதியினருக்கு பொருள்கள் வழங்கப்படாதிருப்பதாகவும் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரத் தொடக்கத்தில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சில கிராம அலுவலர் பிரிவுகளில் வன்னியில் இருந்து வந்து மீளக்குடியேறிய மக்களுக்கு தொழில் செய்வதற்கு வேண்டிய உபகரணங்கள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டன.

கடந்த ஏப்ரல் மாதத்துக்கும் ஓகஸ்ட் மாதத்துக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வந்தவர்களுக்கு மட்டுமே இப்பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டதாகவும் -

இதேவேளை குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் வந்தவர்களுக்கும் பின்னர் வந்தவர்களுக்கும் எந்தவகையான உதவிகளும் வழங்கப்படவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் குறிப்பிட்ட சில கிராம அலுவலர் பிரிவுகளில் மட்டுமே வன்னியில் இருந்து வந்து குடியேறியவர்களுக்கு பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளில் இது தொடர்பாக எந்த வகையான விவரங்களும் பெறப்படவில்லையெனவும் கிராம அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரே பிரதேச செயலாளர் பிரிவினுள் சில கிராம அலுவலர் பிரிவுகளில் பொருள்களை வழங்கியும், சில கிராம அலுவலர் பிரிவுகளில் பொருள்கள் வழங்காமையினால் கிராம அலுவலர்களும் பொதுமக்களின் விசனம் மிக்க கேள்விகளை எதிர்கொள்ளவேண்டியிருப்பதாகக் கூறப்படுகிறது. (ஓ-86)

### நாளை

புரட்டாதி 29
செவ்வாய்க்கிழமை
(15.10.2002)
திதி : தசமி
பின்னிரவு 4.51. வரை.
நட்சத்திரம்: திருவோணம்
முன்னிரவு 7.45 வரை
விஜயதசமி நாள்
கேதாரகௌரி விரதம் ஆரம்பம்
சுபநேரம் : 10.32 - 12.02
ராகுகாலம் : 3.02 - 4.32
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

சுயநலமற்ற நன்மையின் அளவுதான் வெற்றியின் அளவை எல்லா இடத்திலும் நிர்ணயம் செய்கிறது.

### கொடிகாமத்தில் செயற்படும்

## மருந்தகத்தில் மருந்தின்றி நோயாளர்கள் பெரும் அவதி!

தென்மராட்சி,ஒக்.14

கொடிகாமம் மத்திய மருந்தகத்தில் வழங்கப்படும் மருந்துகள் போதியளவு இல்லாததால் நோயாளிகள் மருந்துகளை வெளிக்கடைகளில் வாங்கவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. யுத்த அனர்த்தத்தால் பெரும் இழப்புக்களைச் சந்தித்த அப்பகுதி மக்கள் மருந்துகளை தனியார் கடைகளில் வாங்குவதில் பணப்பற்றாக்குறையை எதிர்கொள்வதாகக் கூறப்படுகிறது.

தென்மராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இந்த மருந்தகத்திற்கு சிகிச்சை பெற வருகின்றபோதிலும் மருந்துகள் இல்லாததால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

தினமும் பி.ப.1.00 மணி தொடக்கம் 6 மணிவரை இயங்கும் மருந்தகத்திற்கு நூற்றுக்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

அத்துடன் இந்த மருந்தகத்தில் போதிய தளபாட வசதிகள் இல்லாததால் நோயாளர்கள் மர நிழலில் உட்கார்ந்திருப்பதையும் காணமுடிகிறது. (ஓ-117)

### யாழ்.வண்ணை வெங்கடேசப் பெருமான் ஆலய தேர்த்திருவிழா இன்றாகும்

## வெற்றிகளைத் தந்திடப்பா!

நீங்காத பகையிங்கே விலகட்டும்
நிரந்தரமானதோர் தீர்விங்கே சேரட்டும்
பாங்கான பண்பாடு பரவட்டும்
பரந்தாமா உன் தேரோட நடக்கட்டும்
தேசநலன் காக்க வேங்கடேசா தேரேறு
தேமதுரத் தமிழோங்க கண்ணனே! தேரேறு
வேஷமதை விலத்திட பார்த்திபா! தேரேறு
வெற்றிகளைத் தமிழ் நிலத்தில் சேர்த்திட
தேரேறு!

- மதுரகவி.

ண

(கா)டு
(ம)னோன்மணி அம்பாள் கோயில்

## (கௌ)ளரி காப்பு

(ப)த்திரகாளி அம்பாள் கோயில் கேதார
...ளின் வசதி கருதி இம்முறையும் வழமை
பே... ...த்தில் வைத்து வழங்கப்படும். கேதார
கௌரி ... ...ரும்பும் அடியார்கள் முன்கூட்டியே தங்கள்
பெயர்களை... ...பு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகி
றோம்.

நாளை (15.10.2002) செவ்வாய்க்கிழமை விரதம் ஆரம்பமா கிறது. எதிர்வரும் (04.11.2002) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு விஷேச பூசையைத் தொடர்ந்து கௌரிகாப்பு நூல் வழங்கப்படும்.

சு.பாலசுப்பிரமணிய ஐயா
ஆலய உரிமையாளரும்
ஆதீன கர்த்தாவும்.

பொ.கிருஷ்ணமூர்த்தி சர்மா
ஆலய நிர்வாகம்.

(9434)

## சொந்த இடத்தில் அஞ்சலகம் இயங்கக் கோரிக்கை

நாவற்குழி, தச்சன்தோப்பு, கோவிலாக்கண்டி ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளபோதிலும் அங்கு தபால் நிலையம் இல்லாததால் இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அஞ்சலகத் தேவைக்காகக் கைதடிக்குச் செல்லவேண்டியுள்ளதாத் தெரிவிக்கப்பட்டது.

தச்சன்தோப்பில் இயங்கிய உப தபால் அலுவலகம் தற்போது கைதடி வடக்கில் தனியார் வீடொன்றில் இயங்குவதால் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் -

மீண்டும் சொந்த இடத்தில் உப அஞ்சல் அலுவலகத்தை இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வடபிராந்திய பிரதி அஞ்சல் மா.அதிபரை இப்பகுதி மக்கள் கோரியுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

(ஓ-117)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.கல்வி வலய முதன்மை ஆசிரியர்

### திரு.ச.இரவீந்திரநாதன்


*(Sc.Trd., B.A., Dip. in Ed.)*

எங்கள் 'இரவி' யாழ்.பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுமாணிப் (M.Ed.) பட்டம்பெற்றதையிட்டு மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். அச்சுவேலியூர் மதுரை மீனாட்சி அம்மன திருவருளால் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு எய்தப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புடன் வாழ்த்தும்:
சு.முத்துக்குமார சுவாமி
சித்தப்பா குடும்பம்.

*ஆஸ்பத்திரி வீதி,*
*அச்சுவேலி.* (சி-24199)

## பன்னிரண்டாம் ஆண்டு நினைவலைகள்





**அமரர் கந்தையா ஜீவரட்ணம்**
(குமார்) (மினிபஸ் சாரதி)
அன்னை மடியில்: 17.07.1960

**திருமதி சுமதி ஜீவரட்ணம்**
அன்னை மடியில்: ..............

ஆண்டவன் அடியில்: 28.09.1990
திதி: 14.10.2002

பன்னீ ராண்டுகள் பறந்தே போயின
பதறியே எம்மனம் உமை நினைந்தே துடிக்குது!
பண்பில்லா பாவியர் புரிந்த சதியினால் - நாம்
பரிதவிக்க உம்முயிர் பிரிந்து போனதோ!

உங்கள் நினைவோடு
வாழும்:
ஐயா, அம்மா,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மருமக்கள்.

*7, சென்மேரிஸ்*
*2ஆம் ஒழுங்கை,*
*கொழும்புத்துறை,*
*யாழ்ப்பாணம்.* (சி-24130)

## 5ஆவது வருட அஞ்சலி

மலர்வு
22
-
01
-
1939



உதிர்வு
10
-
10
-
1997

**திருமதி ஜெகதீஸ்வரி நடராஜா (பபா) B.Sc.**
(இளைப்பாறிய ஆசிரியை, யா/வயாவிளான் ம.ம.வித்தியாலயம்)
திதி: மகாநவமி 14.10.2002

ஐந்து வருடங்கள் ஆனதோ - அந்தோ
நீர் எமைவிட்டுப் பிரிந்து!
இந்த நாளில் உம்மையே நின்னந்து நினைந்து நாம்
தவியாய்த் தவிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர்.

*சேச் ஒழுங்கை,*
*உரும்பிராய்.*

(9342)


# SERENDIB EXPRESS



## AIR LINE

யாழ். - கொழும்பு
விமானப் பயணிகளுக்காக
ஒரு வித்தியாசமான சேவை....

அன்பான வரவேற்பு!
அலுப்பு இல்லாத பயணம்!
நெஞ்சைத் தொடும் உபசரிப்பு!

எமது பயணிகளின் வசதி கருதி வெள்ளவத்தை அலுவலகத்தில் இருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் யாழ்நகரில் இருந்து பலாலி விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்து வசதி.
வாரத்தில் அனைத்து நாள்களும் சேவைகள்.

மிகவிரைவில்!
உள்நாட்டுக்குள் குழுவாகப் பயணம் செய்வோர்
வாடகைக்கு அமர்த்தி பயன்படுத்தக்கூடிய - 8 பயணிகள்
இருக்கைகளைக் கொண்ட - சிறிய ரக விமானங்கள் சேவையில்

விவரங்களுக்கு:

யாழ்ப்பாணத்தில்
மனோஜ் எக்ஸ்பிரஸ்,
13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777-801038
021222-2508

தலைமையகம்
SERENDIB AIRLINE,
500, Galle Road,
Wellawatte, Colombo - 6.
Tel.: 01-505632.
Fax.: 01-500626


24 மணி நேரத் தொடர்புகளுக்கு: 0777 517019

(சி-24201)



## நியாய விநியோகத்திற்கும் இலாப அதிகரிப்புக்கும்

பெற்றோல்/ டீசல் பம்ஸ்
நம்பகமானதும் நியாய அளவுகளுக்கும்



### அறிவித்தல்

அனைத்து L&T பெற்றோல் பம்ப் பாவனையாளர்களுக்கும்

பிரபல்யமான L&T Fuel Pumps யின்
விற்பனை பிரதிநிதி
திரு. A.L.M. Hashim
அவர்களை யாழ்ப்பாணத்தில்
361, கஸ்தூரியார் வீதியில், அமைந்துள்ள
உதயன் பப்ளிகேஸன் நிறுவனத்தில்
2002 ஒக்டோபர் 14ம், 15ம், 16ம் திகதிகளில்
மாலை 3.00 இருந்து சந்தித்து
உங்களுக்கு தேவையான அனைத்து
தகவலினையும் பெற்றுக்கொள்ளவும்.

சக்தியுடன் செயலாற்றவும் எரிபொருள் விநியோகிக்கவும்

ANNAAZ MACHINERIES
PRIVATE LIMITED

136, ... 722263, ... 074 200002
அவசர அழைப்புக்கு: 072 263498 ஈ-மெயில்: annaaz@sltnet.lk

தரமே எமது கொள்கை

# சொத்து உடைமை பிரகடனச்சட்டத்தை உதாசீனப்படுத்தும் அரசியல்வாதிகள்

**சொத்துக்களைப் பிரகடனப்படுத்துவது தொடர்பான 1975ஆம் ஆண்டின் முதலாம் இலக்க சட்டம் மற்றும் 1988இல் அச்சட்டத்துக்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தம் ஆகியனவற்றுக்கு அமைய அரசியல்வாதிகள் சொத்துக்களைப் பிரகடனப்படுத்தவேண்டும். மேலும் அவை குறித்து அறிய மக்களுக்கு உரிமையும் உண்டு. ஆனால், எந்தவோர் அரசியல்வாதியும் சொத்து விவரங்களை ஒழுங்காக வெளியிடுவது கிடையாது. அதற்குப் பொறுப்பான அதகாரிகளான நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் மற்றும் தேர்தல் ஆணையாளர் ஆகியோர் மக்கள் கோரினும் அவற்றை வெளியிட விரும்புவதுமில்லை. சாக்குப்போக்குச் சொல்லி தவிர்த்து வருகின்றனர். இவை குறித்து 'ராவய' வார இதழின் ஆசிரியர் விக்ரர் ஐவன் எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

1996ஆம் ஆண்டளவில் ஒரு நாள் எனக்கு அறிமுகமானவரும் நான் மதிப்பவருமான ஒருவர் இரவுச் சாப்பாட்டிற்கு தன் வீட்டிற்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். அவர் இரவுச்சாப்பாட்டிற்கு என்னை அழைத்தது அவருடன் இருந்து உணவு அருந்துவதற்காக அல்ல. பதிலாக தனது மனதில் இருந்த சில கருத்துக்களை என்னுடன் பகிர்ந்து கொள்ளவே அழைத்திருந்தார்.

அவர் ஜனாதிபதி சந்திரிகாவைப் பற்றியே பிரஸ்தாபித்தார். சந்திரிகாவைப் போன்ற ஏமாற்றுத் தலைவியை முன்னுக்குக் கொண்டு வர நான் முயற்சி எடுத்ததற்கு என் மீது குறை கூறினார். தான் சந்திரிகாவை பதவியில் அமர்த்தப் பணியாற்றாவிடினும் அவரைப் பதவியில் அமர்த்த முன்னெடுக்கப்பட்ட பிரசாரங்களுக்கு 'போஸ்' கொடுத்துள்ளார்.

உங்களுடைய சந்திரிகா இதற்கும் மேலான கபடதாரி, அவர் தான் அணிந்திருக்கும் கைக்கடிகாரத்தின் பெறுமதியை வெளிப்படுத்துவதில்லை, "அட எங்களுடைய ஜனாதிபதி 700 அல்லது 800 ரூபாவுக்கு மேற்படாத மதிப்புள்ள குறைந்த தரம் உள்ள சாதாரண எலெக்ரோனிக் கடிகாரமல்லவா கட்டியிருக்கிறார்"என மூட ஜனங்கள் நினைக்கக்கூடும். ஜே.ஆரின் தங்க றொலெக்ஸ் கைக்கடிகாரத்தின் இன்றைய பெறுமதி மூன்று லட்ச ரூபாவாகவோ, அன்றேல் மூன்றரை லட்சம் ரூபாவாகவோ இருக்க முடியும்.ஆனால், சந்திரிகா கையில் அணிந்திருப்பதோ பதே பிலிப்ஸ் கைக்கடிகாரம். அதைப் பார்க்கும்போது பெறுமதியற்ற சாதாரண கைக்கடிகாரம்போலத் தோன்றினாலும், அதனது பெறுமதி இருபது இலட்சத்துக்கும் மேலாகும். நீர் அடுத்த தடவை சந்திரிகாவைச் சந்திக்கும் சமயம் அவர் அணிந்துள்ள கைக்கடிகாரம் என்ன தயாரிப்பு என்பதை அலசி ஆராயும். அந்தக் கைக்கடிகாரத்தையும் உருளை வடிவான விதை மாலையையும் 1994இல் அதிகாரத்திற்கு வருமுன்னரே அணிய ஆரம்பித்தாரா என விசாரித்து அறியுங்கள் என்று நண்பர் கேட்டுக்கொண்டார். அத்தோடு, 'சீ.எம்.பி' அல்லது 'கே.சீ.எம்.பி' எனச் சுருக்கமாக அழைக்கப்பட்ட சந்திரிகாவின் பாட்டனாரான பண்டாரநாயக்கா மகமுதலி பற்றியும் நண்பர் விவரித்தார். மகமுதலி ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து தமது செல்வம் அனைத்தையும் செலவு செய்தமையால் இறந்தபோது தமது பிள்ளைகளுக்கு பணம் எதனையும் விட்டுச் செல்லவில்லை. விட்டுச் சென்ற காணிகளும் எவ்வித வருமானங்களும் கொடுக்காத தரிசு நிலங்கள் ஆனமையினால், பிள்ளைகள் மற்றும் குடும்பத்தவர்களால் மகமுதலியைப் போன்று ஆடம்பர வாழ்வு வாழ முடியாமல் போய்விட்டதாக நண்பர் தெரிவித்தார்.

## மாற்றார் தோட்டத்திலிருந்து...

ஏமாந்து ஜனாதிபதி நேர்மையாக நாட்டில் மாற்றங்களைக் கொண்டு வருவார் என்ற நம்பிக்கையில் அவருக்கு வாக்களித்ததாகவும், இந்த விடயத்தில் குறிப்பிட்ட ஓர் அளவுக்கு தானும் பொறுப்பேற்கவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

அச்சமயம் அவர் பலதரப்பட்ட விடயங்கள் பற்றியும், அவை சம்பந்தமான நாட்டு மக்களின் ரசனை பற்றியும் தனது மனக் கருத்தை வெளியிட்டார்.

"உலகத்தில் இன்று பெறுமதி மிக்கது தங்கம் என்றே நமது மூடச் சனங்கள் நினைக்கிறார்கள். தங்கம் பெறுமதிமிக்கதுதான். ஆனால் தங்கத்தைப் போன்று ஒளி தருகின்ற அல்லது தங்கத்திலும் பெறுமதி கூடிய விடயங்களும் உள்ளன.

உலகத்தில் இன்று மூடப்பெண்கள் தங்களது தராதரத்தை மற்றவர்களுக்குப் பறைசாற்றுவதற்காக, கைகளை, உடலை தங்க ஆபரணங்களால் நிரப்புகிறார்கள். ஆனால் ஜனாதிபதி சந்திரிகா ஒளி வீசும் தங்கச்சங்கிலியா அணிந்திருக்கிறார்? அவர் அணிந்திருப்பது ஒளி வீசாத சாதாரண இமிடேசன் மாலையல்லவா? எங்கள் தலைவி சந்திரிகா எவ்வளவு எளிமையானவர், எவ்வளவு நல்லவர்? என்று நமது நாட்டு மூடப்பொதுமக்கள் நினைக்கிறார்கள்.

"நம்நாட்டு மூடப் பொதுமக்கள் சந்திரிகா உருண்டை வடிவ விதைகளாலான - எப்பெறுமதியும் இல்லாத, சாதாரண இமிடேசன் சங்கிலிதான் அணிந்திருக்கிறார் என நினைக்கிறார்கள். ஆனால், அவர் அணிந்திருப்பதோ, வெளிப்பார்வைக்கு இமிடேசன் மாலை போலத் தெரிந்தாலும், தங்கத்தால் செய்த சங்கிலியின் பெறுமதியைவிட 23 மடங்கு பெறுமதிமிக்கது என்பதை அந்த மூடப்பொதுமக்கள் அறிய மாட்டார்கள்" என்றார் அவர்.

சந்திரிகாவின் அந்த சங்கிலி பற்றிய தனது விமர்சனத்திற்குப் பின்னர், எனது நண்பர் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன அணிந்த தங்க றொலக்ஸ் கைக்கடிகாரம் பற்றியும், ஜனாதிபதி சந்திரிகா அணியும் பதே பிலிப்ஸ் கைக்கடிகாரம் பற்றியும் விமர்சிக்க ஆரம்பித்தார்.

முற்காலத்தில் பணம் படைத்தவர்கள் தங்கப்பல் கட்டிக்கொள்வதை ஒரு வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஜே.ஆர்.கூட இவ்வகை மனிதரே. கையில் கட்டிக்கொள்வது தங்க றொலெக்ஸ் கடிகாரம் அது தங்கக் கைக்கடிகாரம் என்பது பார்ப்பவர் யாவருக்கும் தெரியும். சில புகைப் படங்களுக்கு, அந்தக்கைக் கடிகாரம் தெரியும் வகையிலேயே

பண்டாரநாயக்காவின் தந்தைக்கு ஹொரகொல்லவில் உள்ள தோட்டத்துடன், மேலதிகமாக அளுத்கடை நீதிமன்றத்துக்கு அண்மையிலுள்ள சில்வர் சிமித் மாவத்தையில் (இப்போதைய பண்டாரநாயக்கா மாவத்தை) உடகலுவத்த என்ற பெயரிலும் தோட்டமொன்று இருந்தது. அக்காலத்தில் அப்பகுதி பிரபுக்கள் குடும்பங்கள் வசிக்கும் பகுதியாய் இருந்தது. கோட்டை அரச பரம்பரையைச் சேர்ந்த சேர்.தோமஸ் சம்டாயோ, பிரபல இலக்கியவாதியான போல் பீரிஸ், பண்டாரநாயக்காவின் மாமனாரான எஸ்.சீ.ஒபேசேகர, ஐம்பதுக்கைம்பது கோரிக்கையின் மூலகர்த்தாவான ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆகியோரது வீடுகள் அப்பகுதியில் அமைந்திருந்தன.

சுமார் ஒன்றரை ஏக்கர் நிலத்தில் அமைந்திருந்த உடகலுவத்த என்ற பழமைவாய்ந்த, கம்பீரத்தோற்றத்துடன் காட்சியளித்த வாசஸ்தலம் உறுதியான நிலையில் இருந்தது. இப்பிரதேசத்தில் காலப்போக்கில் ஒழுங்கைகளும், வியாபார நிலையங்களும் தோன்ற ஆரம்பித்ததால், அங்கு வசித்து வந்த பிரபு வர்க்கத்தினர் தங்களது மாளிகைகளை விற்றுக்கொண்டு கொழும்பு நகரத்தின் அமைதி நிறைந்த பகுதிகளுக்கு செல்லநேரிட்டது.

உடகலுவத்த தோட்டத்தை விற்றுவிட்டு 1946இல் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பின்னர் வாழ்ந்த ரோஸ்மீட் பிளேஸ் 65ஆம் இலக்க வீட்டை விலைக்கு வாங்கி மகமுதலி அங்கு குடியேறினார். அது பிரபல வைத்தியரான லூசன் சில்வாவுக்குச் சொந்தமாயிருந்த - பின்னர் இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் இராணுவ வைத்தியசாலையாக மாற்றப்பட்ட - வீடாகும். மகமுதலியின் மகன் திருமணம் செய்தபின்னர் மனைவியுடன் வாடகை வீட்டில் குடியிருந்தமையால் அவ்வீட்டை வாங்க வேண்டியேற்பட்டது.

ரோஸ்மீட் பிளேஸிலுள்ள இந்த வீடு வாங்கப்படும்வரை பண்டாரநாயக்காவும் ஸ்ரீமாவோவும் கொழும்பு கறுவாக்காட்டில் ஹில்பேர்ட் கிறெசென்ற் என்ற இடத்திலுள்ள பிரபல சினிமா இயக்குநர் லயனல் வென்ற் என்பவருக்குச் சொந்தமான 'வென்ற் வேர்த்' என்ற பெயர் கொண்ட வீட்டில் வசித்து வந்தனர்.

மகமுதலி இறந்தபோது தனது பிள்ளைகளுக்கு எந்தச் செல்வத்தை



பண்டாரநாயக்காவின் தந்தை மகமுதலி பண்டாரநாயக்கா

யும் விட்டுச் செல்லவில்லை. பெரிய நிலப்பரப்பு அவர் பெயரில் இருந்தபோதும் அது விவசாயம் செய்வதற்கு ஏற்றதாக இல்லாமையால் அந்த நிலத்திலிருந்து எதுவித வருமானமும் கிடைக்கவில்லை.

1952ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் போட்டியிட்டு பொருளாதார ரீதியில் நலிந்திருந்த வேளையிலேயே 1956ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலை எதிர்கொள்ளவேண்டிய நிலை பண்டாரநாயக்காவுக்கு ஏற்பட்டது. 1956 பொதுத்தேர்தல் நேரத்தில் அவரது கட்சி சார்பாகப் போட்டியிடத் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களில் பெரும் பகுதியினர் செல்வந்தரல்லாத சாதாரண வகுப்பைச் சேர்ந்தவர்களாவர். இதன் காரணமாக தேர்தல் பிரசாரங்களுக்கு ஏற்படும் செலவுகளை ஏற்கும் பொறுப்பு பண்டாரநாயக்காவின் மீது சுமத்தப்பட்டிருந்தது.

இப்பொதுத்தேர்தல் செலவுக்குத் தேவையான பணத்தை ஸ்ரீமாவோவின் அதிருப்தியையும் சமாளித்து ரோஸ்மீட் பிளேஸ் வீட்டை ஈடு வைத்துக் கடன் பெற்றார் பண்டாரநாயக்கா. இவ்விவரம் ஸ்ரீமாவோ பற்றி மொறீன் செனெவிரத்ன எழுதிய 'சிறிமாவோ பண்டாரநாயக்கா உலகின் முதல் பெண் பிரதமர்' (Srimavo Bandaranaike - The World's first Woman Primeminister) என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. பண்டாரநாயக்காவுடன் நெருங்கிப் பழகிய அவரது நெருங்கிய உறவினரான ஹென்றி அபேவிக்ரம எழுதிய நூலின்படி பண்டாரநாயக்கா தனிப்பட்ட மூவரிடம் கடன் பெற்றிருந்தார். பண்டாரநாயக்கா கொலைச் சதியில் சூத்திரதாரியும், அந்த வேளையில் களனி விகாராதிபதியுமாயிருந்த புத்தரகித தேரோ இவர்களில் ஒருவராவார். மற்றொருவர் விமலா விஜயவர்த்தனா ஆவார். மூன்றாவது நபர் பண்டாரநாயக்காவுடன் நெருங்கிப் பழகிய கொழும்பில் வசித்த தமிழரொருவர். அவர் பெருந்தொகைப் பணத்தை கைமாற்றாக வழங்கியிருந்தார் எனவும், அவரது பெயரைக் குறிப்பிடவிரும்பாததால் தனது குறிப்புப் புத்தகத்தில் அவரது பெயரைக் குறிப்பிடாமல் தவிர்த்திருந்ததாகவும் ஹென்றி அபேவிக்கிரமவின் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பணக் கைமாற்றுப் பற்றி மொறின் செனிவிரத்னவின் புத்தகத்திலும், மலல்கொட பந்துதிலக எழுதிய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் வரலாற்றுப் புத்தகத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும், நூல்கள் எவற்றிலும் குறிப்பிட்ட அத்தமிழர் யார் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை. அவர் வேறுயாருமல்ல, மனித உரிமைகள் விடயத்தில் முன்னின்று உழைத்த எஸ்.நடேசனே அவராவார். அப்படி அவர் கைமாற்றாக வழங்கிய பணம் இரண்டு லட்ச ரூபாவாகும்.

1956ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலுக்கு முன்னர் ரோஸ்மீட் வீட்டை இலங்கை வங்கியில் ஈடுவைத்து கடன்பெற எடுக்கப்பட்ட முயற்சி அப்போதைய பிரதமரான சேர்ஜோன் கொத்தலாவலையால் இலங்கை வங்கிக்கு கொடுத்த அழுத்தம் காரணமாக கைகூடவில்லை. இருந்தபோதும் 1956 பொதுத்தேர்தல் வெற்றியின் பின்னர் பண்டாரநாயக்காவுக்கு இலங்கை வங்கியில் அவ்வீட்டை ஈடு வைத்து கடன் பெற்றுக்கொள்ள முடிந்தது. அக்கடன் தொகையைக் கொண்டு அத்தமிழரிடம் கைமாற்றாகப் பெற்ற கடனை மீளச் செலுத்த முடிந்தது. வங்கியில் பெற்ற கடன் தொகையை இருபது வருடங்கள் வரை செலுத்தி முடிக்க வேண்டியிருந்ததென்று ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூறியதாக மலல்கொட பந்துதிலகவின் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகமுதலியின் மரணத்தின் பின்னர் பண்டாரநாயக்கா குடும்பத்தின் பொருளாதாரப் பின்னணி நல்ல நிலையில் இருக்கவில்லையென இக்குறிப்பினின்றும் புலப்படுகிறது. காணி உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் இக்குடும்பத்துக்கு சொந்தமான நிலத்தில் குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் 50 ஏக்கர் தவிர மற்றையவற்றையெல்லாம் இழக்கநேர்ந்தது. சுவீகரித்த காணிக்காக அரசு வழங்கிய நட்டஈட்டுத் தொகையாக அக்குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் ஒரு லட்சத்துக்கு மேற்படாத தொகையையே பெற்றனர். அத்தோடு தமக்குக் கிடைத்த 50 ஏக்கர் காணியிலிருந்து மிகக் குறைந்த வருமானத்தையே பெறமுடிந்தது.

### வீயெஸ்ரீ

விஜயகுமாரதுங்க சினிமாத் தொழில் மூலம் பணம் தேடிக்கொண்டபோதும் அரசியலில் ஈடுபட நேர்ந்தமையால் அவராலும் சேமிப்பு எதனையும் மேற்கொள்ள இயலவில்லை. அவரது மரணத்தின்பின் அக்குடும்பத்தினர் சிரமத்தின் மத்தியிலேயே வாழ்க்கையை ஓட்ட முடிந்தது. ஜனாதிபதி சந்திரிகாவின் தொலைக்காட்சிப் பேட்டியின் பிரகாரம் தமது உயிரைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு அவர் பிரிட்டனுக்குச் சென்ற பின்னர் தமது குடும்பச் செலவுக்காக அவர் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. அவரது பிள்ளைகள் மற்றையோர் அணிந்து கழித்த உடுப்புக்களையே அணிய நேர்ந்தது.

ஆனால், அரசியலில் அதிகாரம் பெற்ற பின்னர் அதிசயமான வகையில் இவை யாவும் மாற்றமடைந்தன.

சந்திரிகாவின் பதே பிலிப்ஸ் கைக்கடிகாரம் பற்றிக் கேள்விப்பட்டிருந்தமையால் அந்த உரையாடலின் பின்னர் ஜனாதிபதியுடனான முதல்சந்திப்பின்போது எதுவும் அறியாதவன்போன்று அவர் அணிந்திருந்த கைக்கடிகாரத்தை அவதானிக்கக் கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. எனது நோக்கம் அவர் அணிந்திருப்பது, நான் கேள்விப்பட்டது போன்ற பிலிப்ஸ் கைக்கடிகாரம்தானா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதாகும். ஆக, அது பிலிப்ஸ் கைக்கடிகாரம்தான் என்பதை தெரிந்துகொண்டேன்.

நான் எனது பத்திரிகைக் காரியாலயத்தில் இருந்த சமயம், ஜனாதிபதியிடமிருந்து எனக்கு தொலைபேசி அழைப்பு வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. தொலைபேசியில் தொடர்புகொண்டபோது ஜனாதிபதி அந்தப் பிலிப்ஸ் கைக்கடிகாரம் பற்றிக் கதைத்தது எனக்குப் புதுமையாயிருந்தது. நான் இதற்கு முன்னர் அந்தப் பிலிப்ஸ் கைக்கடிகாரம் பற்றி எதுவும் அறிந்திருக்கவில்லை என நினைத்து அக்கடிகாரம் பற்றிய விவரங்களை ஜனாதிபதி விவரித்தார். அக்கைக்கடிகாரத்தை தமக்கு பரிசுப்பொருளாக வழங்கிய வர்த்தகர் பற்றியும் இப்பரிசளிப்புக்கு இடையாளராக இயங்கிய நபர் பற்றியும் விரிவான விளக்கமளித்தார். மேலும் தான் அக்கடிகாரத்தை ஏலத்தில் விற்பனை செய்ய விரும்புவதாகவும், அது சம்பந்தமான விளம்பரமொன்றினைப் பத்திரிகையில் வெளியிட்டு உதவுமாறும் கேட்டுக்கொண்டார்.

இத்தொலைபேசி உரையாடல் குறுகிய நேரம் இடம்பெற்றதல்ல. சுமார் 20 அல்லது 25 நிமிடங்கள் வரை நாம் தொலைபேசியில் உரையாடினோம். அதன்போது கைக்கடிகாரம் பற்றிய முழுத் தகவல்களையும் அவர் தெரிவித்தார். அந்த உரையாடல்களிலிருந்து அவருக்கு அக்கடிகாரம் எவ்வாறு கிடைத்தது என்பது பற்றித் தெரிந்துகொள்வது சிரமமாயிருக்கவில்லை.

அந்த நீண்ட உரையாடலின் முடிவில் இந்த விவரங்களை வேறு எவருக்கும் தெரியப்படுத்தவேண்டாமென நான் அவரைக் கேட்டுக்கொண்டேன். எனது அவ்வேண்டுகோள் ஜனாதிபதியின் மனதில் கேள்விக்குறியை ஏற்படுத்தி இருந்திருக்கவேண்டும். "ஏன் அவ்விதம் கூறுகிறீர்? என அவர் வினாவினார்.

"அக்கைக்கடிகாரம் லஞ்சம் என்ற விதத்தில் தரப்பட்டிருந்தால் ,அந்த நேரத்திலேயே அதனை ஏற்க மறுத்திருக்கவேண்டும். அதுவுமன்றி அவ்வாறு அதனை தர முயன்றவரையும் காட்டிக் கொடுத்திருக்கவேண்டும். அதை விடுத்து, லஞ்சமாகப் பெறப்பட்ட அக்கைக்கடிகாரத்தை ஏறக்குறைய இரண்டு வருடங்களாக பயன்படுத்திய பின்னர் அம்மனிதருடன் கருத்து முரண்பாடு கொண்ட காரணத்தால், அதனை ஏலத்தில் விடப்போவதாகக் கூறுவது ஏன் என யாராவது கேள்வி எழுப்பினால் என்ன விடையளிப்பீர்கள்?" இவ்வாறு நான் ஜனாதிபதியை வினவினேன். இது அவருக்குக் கோபத்தை ஏற்படுத்தியிருக்கவேண்டும். தொலைபேசி உரையாடலை அத்தோடு துண்டித்துக்கொண்டார்.

ஜனாதிபதியுடன் எனக்கிருந்த நல்லுறவு இதனால் அற்றுப்போனதற்கு இந்த தொலைபேசி உரையாடலும் காரணமாகும். ஆயினும், பிலிப்ஸ் கைக்கடிகாரம் பற்றி என்னுள் எழுந்த கேள்விக்குறி அப்போதும் அற்றுப்போகவில்லை. நான் இவ்விடயம் பற்றி மேலதிக தகவல்களைத் திரட்ட முயன்றேன்.

இவ்விடயத்தில் ஜனாதிபதி எதற்காகப் பதற்றமடைய வேண்டுமெனச் சிந்தித்தபின், ஓர் அரசுத் தலைவர் தனக்குக் கிடைக்கும் அன்பளிப்பை தான் தனிப்பட்டவகையில் பாவிப்பதற்கு உரிமையற்றவராவார். அவை யாவற்றையும் நிரல்படுத்தி திறைசேரியிடம் கையளிக்கக் கடமைப்பட்டவராவார் என்ற வகையில் விமர்சனம் ஒன்றினை எழுதி 'ராவய' பத்திரிகையில் பிரசுரித்தேன். அதனது ஆங்கில மொழிபெயர்ப்பு 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியானது.

"ஒரு நாட்டின் அரசுத் தலைவர் பிறநாட்டு அரசுத் தலைவர்களைச் சந்திக்கும் சமயங்களில் அரசு மட்டத்தில் பரிசுப் பொருள்கள் பரிமாறிக் கொள்வது எல்லா நாடுகளிலுமுள்ள சம்பிரதாயம் ஆகும். அதேபோன்று வெளிநாட்டு அரசுத் தலைவர்களிடமிருந்தும் நமது அரசுத் தலைவர்களுக்குப் பரிசுகள் கிடைப்பது வழக்கம்.

*(வளரும்)*

ஓம் நமோ நாராயணாய!

# வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய


# தேர்த்திருவிழா சிறப்பிதழ் – 14:10:2002

## நாராயணனைத் துதித்து நாம பஜனை செய்வோம்!

பாகவத தர்மத்தின் உயிராக விளங்குவது நாம சங்கீர்த்தனமே. கலி காலத்திலே சகல தர்மங்களும் சரிவர அனுஷ்டிக்க முடியாதுபோய்விடும் எனக் கருதிய மகான்கள் நாம சங்கீர்த்தனமே கலியில் சகல செல்வங்களையும் தரக்கூடியது எனக் கூறியுள்ளனர்.

நாம சங்கீர்த்தனத்தில் ஈடுபடுபவர்களுக்கு எவ்வித துன்பமும் நேராது. மிக விசேடமான பஜனை மார்க்கத்தை ஆத்மாக்கள் கைக்கொண்டு உய்தி பெறவேண்டி ஆழ்வாழ்களும், நாயன்மார்களும், மஹான்களும் அவதரித்து நாம சங்கீர்த்தனத்தை பிரசாரம் செய்துவந்தனர். எந்தக் கருமங்களைச் செய்வதாயினும் பொருட்செலவையும், உதவிக்குப் பிறரின் அனுசரணையையும் எதிர்பார்க்க வேண்டியிருக்கின்றது. அனால், நாம சங்கீர்த்தனத்திற்கு இந்நிலை இல்லை. எப்போதும் ராம என்றோ கிருஷ்ண என்றோ நாமத்தை ஜெபம் செய்யலாம். இயந்திர கதியில் மாறிவரும் மனித வாழ்க்கைக்கு ஓர் ஔடதமாக விளங்குவது நாம சங்கீர்த்தனமே. தினந்தோறும் காலையிலோ மாலையிலோ எமக்கு இருக்கும் பல்வேறு வேலைகளுக்கு இடையில் கடவுளை வழிபட சிறிதுநேரம் ஒதுக்கவேண்டும். கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவதுபோல் எவ்வித சிரமுமின்றி வாயினால் சொல்லக் கூடிய நாமசங்கீர்த்தனத்தை விடுத்து ஒவ்வொருவரும் தம் கருமம் சித்திபெற வழி என்ன என அலைகின்றார்கள். இறை நாம ஜெபத்தினால் சகல பாவங்களும் விலகும். இது பொய்யான வார்த்தையாக இருக்குமோ என எண்ணுபவர்களும் உண்டு. நம்பிக்கையை அடிப்படையாக்கக் கொண்டதே வாழ்க்கை. துரியோதனன் சபையில் திரௌபதியின் துகில் உரிந்தபோது அவள் இரு கரங்களை உயர்த்தி, "கண்ணா, கோவிந்தா!! அபயம்!!!" எனக் கதறிய போது இறைவன் அவள் மானத்தைக் காத்தருள் புரிந்தான். நாமும் இக்கலி காலத்தில் இறை நாம பஜனை செய்து இகபர சுகங்களைப் பெறுவோமாக.

ஸ்ரீவத்ஸ.வ.இராஜேஸ்வரக்குருக்கள்
*பிரதம குரு,*
*வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்.*



## தேரேறி வந்து துன்பந் தீர்ப்பாய்!

எழுநூறு வருடங்கள் பழைமை வாய்ந்த வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. இன்று ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவியுடன் எங்கள் இன்னலைத் தீர்க்கத் தேரேறி வருகிறார். அன்று பாரதப் போரில் தூது சென்று சாரதியாகி உலகத்துன்பத்தை நீக்கிய கண்ணன் இன்று வேங்கடேஸ்வரனாகத் தேரேறி எமது துன்பத்தை சமாதானம் மூலம் தீர்த்துவைப்பான் என்பது உண்மை. அவனருள் கிட்டும் என்பது திண்ணம். யாமறிந்த காலம் அன்றுமுதல் இன்றுவரை வேங்கடேசன் தேர் ஏறிவந்து மக்கள் இன்னலைத் தீர்க்காமல் விடவில்லை. இன்றும் எம் பெருமானின் அருளில் நாங்கள் ஒரு சுபிட்சமான வாழ்வை எட்டி எமது நாட்டை மகாலட்சுமி கடாட்சம் நிறைந்த நாடாக்கி வாழ அவன் அருள் கிட்டும் என்று எண்ணி அவனை வணங்கி அருளைப் பெறும் வண்ணம் அடியார்கள் அனைவரையும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

திரு.நா.ஸ்ரீரஞ்சன்
*தலைவர், ஆதீன மகா சபை.*

## வேங்கடவன் தேரேறி.....

*வண்ணைப் பெருமாளின் வடம்பிடித்துத் தேரிழுக்க*
*எண்ணியவை எல்லாம் ஈடேறும் – கண்ணனவன்*
*பொற்பதங்கள் தஞ்சமெனப் போற்றிப் பணிபவர்க்கு*
*நற்கதியை ஈவான் நயந்து!*

*வேங்கடவன் தேரேறி வெளிவீதி சுற்றிவர*
*தீங்குகள் யாவையுமே தெறித்தோடும் – பாங்காக*
*போரோய்வு நீடித்துப் பொருத்தமாய்த் தீர்வொன்றைக்*
*கார்மேக வண்ணனே காட்டு.*

– எஸ்.சி.எஸ்.சிதம்பரநாதன்.

## சித்திரபானு வருட மஹோற்சவப் பெருவிழா

*இரதோற்சவம்:*
இன்று (14.10.2002) திங்கட்கிழமை
வசந்த மண்டபப் பூஜை காலை 7.30 மணி
இரதோற்சவம் காலை 9.00 மணி.

*தீர்த்தோற்சவம்:*
நாளை (15.10.2002) செவ்வாய்க்கிழமை
வசந்த மண்டபப் பூஜை காலை 7.30 மணி
தீர்த்தோற்சவம் காலை 9.00 மணி.

*திருக்கல்யாணம்:*
16.10.2002 புதன்கிழமை
மாலை 4.00 மணி.

*சுமங்கலி தீபபூஜை:*
20.10.2002 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 3.00 மணி.
*(சுமங்கலி தீப பூஜையில் பங்குபற்ற விரும்பும் அடியார்கள் தேவஸ்தானத்தில் தொடர்புகொள்ளவும்)*
☞ *இன்று அன்னதானம் வழங்கப்படும்.*

## வண்ணைதனில் உறைந்திடும் வரதராஜா!

வெண்ணெய் திருடும் கண்ணனே ஸ்ரீ வேங்கடேசா!
வேண்டும் வரந் தந்திடுவாய் ஸ்ரீநிவாசா
வண்ணைதனில் உறைந்திடும் வரதராஜா – நீ
வந்தெமக்குத் தேரிலே அருட் காட்சி தாராய்!
கண்ணையிமை காப்பது போல் காக்கும் திருமாலே
கடிதே வந்தெம்மைக் காத்தருள வேண்டுமையா!
மண்ணையுண்ட வாயனே மாயவனே கேசவனே
எங்களை நீ ஆட்கொள்ள ரதமேறி வந்திடுவாய்!

சித்திரத் தேரிலேறிச் சிங்காரமாய்ப் பவனிவரும்
ஸ்ரீதேவி பூதேவி சமேத வரதராஜப் பெருமானே!
இத்தினந் தனிலேயுன்னை பக்தியே துதித்து நிற்கும்
பக்தருக்கருள் செய்திடும் பரந்தாமனே வாராய்!
முத்தியே யளிப்பாயென்று தேர்வடம் பிடித்தோமையா
சித்தியே தந்தெமக்குச் சீரான வாழ்வருள்வாய்!
நித்தியானந்த நிர்மல மூர்த்தியே நெடுமாலே சரணம்
நீதியை நிலைநாட்டிடத் தேரேறி வந்திடுவாய்!

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்.


காத்தற் கடவுளே திருமாலே!
ரதமேறி வந்து அருள்வீர்!
தரமான தங்க நகைகளைக் குறித்த தவணையில் செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்:
**கண்ணன் கழல் பணிவோர்**
44/1, யாழ்.வீதி,
யாழ்ப்பாணம். (சி-24217)

நாராயணா என்ற நாமம் சொல்லியே
நமனை வெற்றி கொண்டிடுவோம்!
தரமான, சுவையான உணவு வகைகளுக்கு
நீங்கள் உடனே நாடுங்கள்:
**சுவிஸ் விருந்தகம்**
352, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (சி-24221)

தேரேறிவரும் வேங்கடேச பெருமானே!
போரோயச் செய்த திருமாலே வருக! வருக!!
அழகுக்கு அழகு செய்யும் அழகிய அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய நகைமாடம்:
**நதியா நகைமாடம்**
2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-24215)

தேரிலே ஆரோகணிக்கும் வேங்கடேசா!
நேரிலே அருட்காட்சி தந்திடுவாய்!
உங்களுக்குத் தேவையான ஆங்கில மருந்து வகைகளுக்கும், கால்நடைகளின் மருந்துவகைகளுக்கும் மற்றும் பால்மா வகைகள், குளிர்பான வகைகள் அனைத்துக்கும்:
**பகவான் மருந்தகம்**
221, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-24214)

அரக்கரை அழித்த பெருமாளே!
அழகிய ரதத்தில் வருவாயே!!
கண்கவர் புகைப்படங்களுக்கும் வீடியோப் பிரதிகளுக்கும் நாடுங்கள்:
**போட்டோ ரவி அன் வீடியோ**
139, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0777-110015, 0777-110106 (சி-24217)

ரதத்தில் ஆரோகணிக்கும் ரங்கநாதா!
ஜெகத்தில் அமைதியைத் தா! தா! தா!
அழகான, தரமான அச்சுவேலைகளுக்கு அன்பர்கள் நாடவேண்டியது:
**கங்கை ஓவ்செற் பிறிண்டேர்ஸ்**
184A, நாவலர் றோட்,
பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். (சி-24213)

சித்திரத் தேரிலே வரும் வரதராஜப் பெருமாளே!
இத்தினந்தனிலே எங்களுக்கருளிட வா!
நவநாகரீக நங்கையர் விரும்பும் தங்க நகைகளுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம்:
**சிறி மீனாட்சி தங்கமாளிகை**
187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-24211)

வண்ணைப்பதி வேங்கடேசா!
வரமருள வேண்டும் வா! வா!!
வடபகுதி மாணவர்களுக்கு 2003இல் IIS நிறுவனம் தரும் பரிசு பற்றிய விவரம் நாளைய உதயனில் எதிர்பாருங்கள்!
கணனிப் பயிற்சிகளுக்கு கண்ணியம் வாய்ந்த நிறுவனம்:
**IIS**
100, மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். (சி-24209)

வண்ணைப்பதி வேங்கடேசா! வந்தெமக்கு அருள் தாராய்!
கண்ணா மணிவண்ணா!
கார்மேக வண்ணா தேரேறி வாராய்!
களைப்பாயிருக்கிறதா! கவலையை விடுங்கள்!
உடனே விரையுங்கள்:
**லிங்கன் கிறீம் ஹவுஸ்**
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-24218)

கார்மேக வண்ணனே! தேரேறி வந்தருள்வாய்!
அசல் 22 கரட் தங்க நகைகளைக் குறித்த தவணையில் செய்து பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்:
**சாரங்கா நகைமாடம்**
177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P. 2480
**சாரங்கா நகைமாடம் அன் சென்ரர்**
45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**அருள்முருகன் நகைமாடம்**
96/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-24216)

அழகிய ரதமேறும் ஆனந்த வேங்கடேசா!
அருள்புரிந்திடவே ஓடோடி வா!
**லக்ஷன் வீடியோ சென்ரர்**
220, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-24210)

வேங்கடேச வரதராஜப் பெருமானே!
வேதனைகள் தீர்த்திடத் தேரேறி வருவாய்!
தரமான நல்ல கறுப்பு வெள்ளைப் படங்களுக்கும் கலர்ப் படங்களுக்கும்
உடனே நாடுங்கள்:
**கொனிக்கா கலர் லாப்**
14, ஸ்ரீ வேங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம். (சி-24219)

அழகிய ரதத்தில் அமர்ந்து அருட்காட்சி நல்கிடும்
வண்ணை வேங்கடேச பெருமான் அருள் புரிவானாக!
புத்தம் புதிய டிசைன்களில் நவீன பாணியிலமைந்த அழகிய தங்க
நகைகளுக்குச் சிறந்த இடம்:
**சிறி அமலா ஜூவல்லர்ஸ்**
74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-24220)

# திருமலை வில்லூன்றி கந்தசுவாமி ஆலயத்தின் ஆறு ஏக்கர் காணி அந்நியர் ஆக்கிரமிப்பில்!

## மீட்டுத்தரும்படி பிரதமருக்கு மணியகாரர் கடிதம்

திருகோணமலை,ஒக்.14

திருகோணமலை - கண்டி வீதியில் உள்ள வில்லூன்றி கந்தசுவாமி ஆலயத்துக்கு சொந்தமான ஆறு ஏக்கர் காணியை பராமரிப்புக்கென ஒப்படைக்கப்பட்டவர் சட்டத்துக்கு முரணாக சிங்களப் பெரும்பான்மை இனத்தவர் ஒருவருக்கு விற்றுள்ளார். அவர் இன்னுமொருவருக்கு விற்றுள்ளார். கோயிலுக்குச் சொந்தமான இந்தக் காணியில் 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் கோயில் நிர்வாகத்தினர் தமிழர்களுக்கு இருப்பிடத்துக்காக ஒதுக்கிக்கொடுத்த தோடு "ஸ்கந்தபுரி" என்று பெயரும் இட்டுள்ளனர். கலவரம் காரணமாக அங்கு குடியிருந்தவர்கள் இடம் பெயர்ந்து சென்றுவிட்டனர். பராமரிப்பற்றுக் கிடந்த காணியை அண்மையில் வாங்கிய ஒருவர், உரிமை கொண்டாடி, துண்டுதுண்டுகளாகப் பிறருக்கு விற்றுள்ளார். இதனைத் தடுத்து மீண்டும் மக்களைக் குடியேற்றும் பொருட்டு காணியை மீட்டுத் தரும்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்துசமய கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மற்றும் அ.இ.த. காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி, எம்.கே.சிவாஜிலிங்கம் எம்.பி., திருகோணமலை நகரசபைச் செயலாளர் ஆகியோருக்கு கோயில் நிர்வாக உறுப்பினர் அ.மகேஸ்வரன் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமலை - கண்டி வீதியில் எனது மூதாதையரின் பராமரிப்பில் இருந்து வந்த ஆறு ஏக்கர் காணி, திருகோணமலை வில்லூன்றி கந்தசுவாமி கோயிலின் வயல் காணியாகும். அதனை சி.வடிவேல் என்பவர், எனது தகப்பனாரின் இறப்பிற்குப் பின்பு பராமரித்து வந்தார். இவர் வெளியூர் கடமையின் பொருட்டு 1958,1960 காலப் பகுதிகளில் ராமசாமி என்பவரிடம் காணியை மேற்பார்வைக்காக ஒப்படைத்தார். அதை ராமசாமி பெரும்பான்மை இனத்தவர் ஒருவருக்கு விற்றுவிட்டார்.

இந்தப் பெரும்பான்மை இனத்தவர் காணியை வேறு ஒருவருக்கு விற்றுள்ளார். அவர் அதைத் துண்டுகளாகப் பலருக்கு விற்றுப் பணம் சம்பாதிக்கின்றார்.

சி.வடிவேல் என்பவரின் பராமரிப்பில் இருக்கும்போது வசதிகுறைந்த 75குடும்பங்களுக்கு சிறுசிறு துண்டுகளாக இந்தக் காணி பிரித்து வழங்கப்பட்டது. இவர்களிடமிருந்து ஆலயத்துக்காக மாதாந்தம் 75 ரூபா வசூலிக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு ஜுன் மாதம் இடம்பெற்ற கலவரத்தினால் மக்கள் இடம்பெயர்ந்தனர். இதனால் காணி வெறிச்சோடியது.

நகரசபையிலும் நகர மேம்பாட்டுத் திணைக்களத்திலும் இந்தக் காணி ஆலயத்துக்குச் சொந்தமானது என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. எனவே, வசதிகளற்ற குடும்பங்களுக்கு உதவும் வகையில் காணியை மீட்டுத்தருக.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் கேட்கப்பட்டிருக்கிறது. மேற்படி கடிதத்துடன் காணிதொடர்பான ஆதாரங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதை அடுத்து கடிதம் தொடர்பாக சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி பிரதமர் அலுவலகத்தில் இருந்து காணித் திணைக்களத்தின் செயலாளருக்கும் இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சில் இருந்து திருகோணமலை நகரசபை செயலாளருக்கும் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஒ)

### சண்டிலிப்பாய் பிரதேசத்தில்

# மீளக்குடியமர்ந்தவர்களுக்கு குடிசைகள் அமைக்கத் திட்டம்

சண்டிலிப்பாய்,ஒக்.14

தரைவழிப்பாதை திறக்கப்பட்டதை அடுத்து வன்னிப் பிரதேசத்திலிருந்து வந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் மீளக் குடியேறிய குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் 50 குடிசைகளை அமைத்துக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் கூட்டமொன்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வாரம் நடைபெற்றது. பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

கடந்த போர்க்கால அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்ட பகுதிகளான மாதகல், மாரீசன்கூடல், முள்ளானை, பெரியவிளான், சில்லாலை ஆகிய கிராம அலுவலர்கள் பிரிவுகளில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கே இந்த திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும் என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-135)

### மண்டைதீவுப் பகுதியில்

# திருட்டுப் பொருள்களை கடத்திய மூவர் சிக்கினர்

மண்டைதீவு,ஒக்.14

மண்டைதீவுப் பகுதியில் மக்கள் மீளக் குடியமராத வீடுகள் மற்றும் பொதுக்கட்டடங்களில் இருந்து கட்டடப் பொருள்கள் மற்றும் வீட்டு உபகரணப் பொருள்களை திருடிக் கடத்திய மூவர் அதிகாரிகளிடம் சிக்கினர்.

மண்டைதீவுப் பகுதியில் உள்ள கட்டடங்களில் உள்ள பித்தளைப் பொருள்கள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்களை திருடும் மூவர் அடங்கிய குழு பஸ்மூலம் அவற்றைக் கடத்துவதாகத் தெரியவந்தது.

இதையடுத்து பஸ்ஸில் உரச்சாக்கு மூடை ஒன்றுடன் பயணித்த மூவரை சோதனையிட்ட போது திருட்டுப் பொருள்களை அவர்கள் கடத்தியது தெரியவந்தது. அவர்கள் மூவரும் எச்சரிக்கப்பட்டு பின்னர் அனுப்பி வைக்கப்பட்டனர். (ஒ-ரி)

### பாடசாலை சேவை போன்று

# பொதுமக்களின் நன்மை கருதி பாஷையூருக்கு பஸ்சேவை நடத்துக

## அருட்திரு. எம்.யேசுரட்ணம் அடிகள் கோரிக்கை

குருநகர்,ஒக்.14

யாழ்.பஸ்நிலையத்திலிருந்து யாழ். - கொழும்புத்துறை வீதியூடாக கொழும்புத்துறை, பாஷையூர் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்படும் பஸ் சேவையைப் போன்று இப்பகுதிகளில் வாழும் பொதுமக்களின் நன்மை கருதியும் பஸ்சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவேண்டும்.

- இவ்வாறு பாஷையூர் பங்குத்தந்தை அருட்திரு. எம்.யேசுரட்ணம் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து பங்குத்தந்தை அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது மக்கள் போக்குவரத்து வசதியின்றி மிகவும் சிரமத்துக்குள்ளாகியிருக்கின்றனர். தற்போது பாடசாலைச் சேவைகளைத் தவிர வேறு எச்சேவையும் இப்பகுதியில் நடத்தப்படுவதில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புத்துறை வீதியூடாக கொழும்புத்துறை இந்து ம.வி., பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் பாடசாலை மாணவ மாணவிகளுக்காக மட்டும் இச்சேவை தங்களால் நடத்தப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து பாஷையூர் சுமார் 2கிலோ மீற்றர் இடைவெளியில் அமைந்துள்ளது. இந்த இடைப்பட்ட தூரத்தில் இப்பாடசாலை பஸ் சேவையைத் தவிர வேறு எதுவித பஸ் சேவையும் நடைபெறுவதில்லை. எமது மக்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்கு செல்வதாயின் சுமார் 1கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள கண்டி வீதிக்கு கால் நடையாக சென்றே பஸ்களில் பயணிக்கவேண்டியுள்ளது.

யாழ்நகருக்குள் செல்வதற்கும் இதே நடைமுறையே பின்பற்ற வேண்டியுள்ளது. வயோதிபர், நோயாளர், பெண்கள் அனைவரும் பஸ் சேவை இல்லாததனால் மிகவும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புத்துறை வரை கடற்கரை வீதியூடாக முன்னர் நடைபெற்றுவந்த யாழ். - கொழும்புத்துறை இல.790 பஸ் சேவையையும் தற்போது ஆரம்பிக்கமுடியாதநிலை உள்ளது.

எனவே தற்போது நடைபெற்று வரும் பாடசாலைச் சேவையை மேலும் விஸ்தரித்து பொதுமக்களுக்கான சேவையையும் ஆரம்பித்து எம்மக்களின் போக்குவரத்துப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-51)

## இந்து மாமன்றம் இலவச கொப்பி விநியோகம்

கொழும்பு ,ஒக்.14

அகில இலங்கை இந்து மாமன்றத்தால் வசதிகுறைந்த மாணவர்களுக்கு கொப்பிகள் இலவசமாகக் கொடுப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. அவ்வாறான மாணவர்களின் பெயர்கள், வகுப்பு, தேவையான கொப்பிகளின் தொகை போன்ற விவரங்களை பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம், 91/5 சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை, கொழும்பு-2 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி பாடசாலை அதிபர்களை மாமன்றம் கேட்டுள்ளது.

344720 என்ற 'பக்ஸ்' இலக்கத்துக்கும் விவரங்களை அனுப்பலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## 'நவீல்ட்'டுக்கு ஐ.நா. அமைப்பு உதவிநிதி

கைதடி நவீல்ட் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தொழில்சார் பயிற்சிகளை வழங்குவதற்குரிய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு அகதிகளுக்கான தூதுவராலயம் ஐந்து லட்சம் ரூபாவினை ஒதுக்கியுள்ளது.

இந்நிதியில் தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள், தையல் இயந்திரங்கள், கடித உறை தயாரிக்கும் இயந்திரம் போன்றவை கொள்வனவு செய்யப்படவுள்ளதாக தென்மராட்சி பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினர் தெரிவித்தனர்.(ஒ-117)

## இந்திய மீனவரின் விளக்கமறியல் நீடிப்பு

தலைமன்னார் கடற்பரப்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட 6 இந்திய மீனவர்களின் விளக்கமறியல் உத்தரவை நீடித்து மன்னார் மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. நேற்றுமுன்தினம் இரண்டாவது தடவையாக மன்னார் மாவட்ட நீதி மன்றில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்டபோதே இந்த மீனவர்களை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாவட்ட நீதிவான் முகைதீன் உத்தரவு பிறப்பித்துள்ளார். (ஒ-12)

### காஞ்சிரங்குடா தாக்குதலைக் கண்டித்து

# கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் அமைதிப் பேரணி, வீதி மறியற்போர்

கிளிநொச்சி,ஒக்.14

அம்பாறை மாவட்டம் திருக்கோயில் காஞ்சிரங்குடாவில் பொது மக்கள் மீது அதிரடிப்படையினர் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து அமைதிப் பேரணியும் வீதி மறிப்புப் போராட்டமும் கிளிநொச்சயில் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றிலில் ஆரம்பமான அமைதிப் பேரணியில் பெரும் எண்ணிக்கையான மக்கள் பங்கேற்றனர்.

நோர்வே அரசு, கண்காணிப்புக் குழு ஆகியவற்றுக்கான மகஜர்களை கண்காணிப்புக்குழு அலுவலகத்திலும் -

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கான மகஜர்களை கிளிநொச்சி அரச அதிபரிடமும் - பேரணியினர் கையளித்தனர்.

பேரணி ஆரம்பமாவதற்கு முன்னர் கிளிநொச்சியில் ஏ-9 பாதைக்கு குறுக்கே மரக்குற்றிகளைப் போட்டு வீதிமறிப்புப் போராட்டங்களில் மக்கள் ஈடுபட்டனர்.

நான்கு மணிநேரம் இடம்பெற்ற மேற்படி போராட்டம் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலையூடாக வந்த தென்பகுதி வாகனங்கள் 4மணிநேரம் கிளிநொச்சியில் காத்துக்கிடந்தன. (எ-3)

### காங்கிரஸ் கட்சியினர்

# தமிழ்க் கைதிகளை விடுவிக்க அழுத்தம் கொடுப்பார்களாம்

சிறைகளில் விசாரணையின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை உடன் விடுதலை செய்யுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழுத்தம் கொடுப்பதென அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கட்சித் தலைவர் அ.விநாயகமூர்த்தி எம்.பி. தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி., உப தலைவர் ஆர்.ஈ.ஆனந்தராஜா, செயலாளர் ரி.மகேந்திரராஜா, சீ.வீ.கே.சிவஞானம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

குடாநாட்டிலுள்ள பிரதேச சபைகளைக் கலைத்துவிட்டு, அவற்றை விசேட ஆணையாளர்களின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என்றும் - பருத்தித்துறையை அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் பிரதிநிதித்துவம் செய்ததால் அன்னாருக்கு பருத்தித்துறையில் சிலை ஒன்று அமைப்பது எனவும் -

இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. தொடர்ந்து கட்சியின் பருத்தித்துறைக் கிளை ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. கிளையின் தலைவராக சட்டத்தரணி ஆர்.உருத்திரா தெரிவுசெய்யப்பட்டார். (ஒ-173)

# யாழ். செயலகத்தில் வாசல்கள் மாற்றம்

குருநகர்,ஒக்.14

யாழ்.அரச அதிபராக செ.பத்மநாதன் பதவியேற்ற பின்னர் யாழ். செயலகத்தின் போக்குவரத்துப் பாதை மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

யாழ்.செயலக ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் யாழ்.செயலகத்துக்குச் சென்று வர யாழ்.கச்சேரி - நல்லூர் வீதியின் அருகில் உள்ள மேற்குப்புற வாசலையே இதுவரையிலும் பயன்படுத்தினர். அதேநேரம் யாழ்.செயலகத்தின் தெற்குப்புறம் யாழ்.கண்டி வீதியில் இருந்த வாசல் போக்குவரத்துக்கு மூடப்பட்டிருந்தது.

ஆனால் புதிய அரச அதிபராக செ.பத்மநாதன் பதவியேற்ற பின்னர் கச்சேரி - நல்லூர் வீதியின் அருகில் அமைந்துள்ள மேற்குப்புற வாசல் மூடப்பட்டு யாழ்.கண்டி வீதியின் பக்கமுள்ள யாழ்.செயலகத்தின் தெற்குப்புற வாசலூடாகவே போக்குவரத்து நடைபெற்று வருகின்றது.

கச்சேரி - நல்லூர் வீதியின் அருகில் அமைந்துள்ள ஆலமரத்தின் கீழ் அமர்ந்திருந்து பிறப்பு இறப்பு விண்ணப்பப் படிவங்கள் தொடர்பான தனிப்பட்ட பணிகளை மேற்கொண்டவர்களும் இப்புதிய வாசல் முன்னால் உள்ள மரநிழல்களில் தங்கித் தமது வேலைகளைச் செய்து வருவதை அவதானிக்கமுடிகிறது. (ஒ-51)

# மருதங்கேணி நோயாளர் அம்புலன்ஸ் இன்றி அவதி

மருதங்கேணி நோயாளிகள் அம்புலன்ஸ் வசதியின்றி அவதியுறுவதாகக் கூறப்படுகிறது.

இப்பகுதியில் பல குடும்பங்கள் மீளக்குடியேறி வருகின்றன. அங்கு தற்போது சுமுகமான நிலை நிலவி வருகின்றது.

எனினும் வைத்தியசாலையில் சேர்க்கப்படும் அவசர நோயாளர்களை குறிப்பாக பிரசவ நோயாளரை மேலதிக சிகிச்சைகளுக்காக வேறொரு வைத்தியசாலைக்கு அனுப்ப அம்புலன்ஸ் வாகன வசதி இன்மையால் நோயாளர் பெரும் கஷ்டமடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது பாதிப்புற்ற நோயாளர்கள் மாட்டு வண்டில்களிலும் ஓட்டோ போன்ற வாகனங்களிலும் செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-70)



வட்டுக்கோட்டை வடக்கு கற்பகச்சோலை கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட தக்காளிப்பழக் கூழ தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட பழக்கூழை தலைவர் எஸ்.குகனேசனிடமிருந்து வடக்கு கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர் கு.பாலகிருஷ்ணன் வாங்கி விற்பனையை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் படத்தில் காணப்படுகின்றனர். (ஒ-175)

# புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.14

திருகோணமலையில் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த ஜனாதிபதி புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் பிற்போடப்பட்டுள்ளது என்றும் -

திருகோணமலை செல்வதற்கென அழைக்கப்பட்ட மாணவர்கள் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு இன்று சமுகமளிக்கத் தேவையில்லை என்றும் -

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/பரியோவான் கல்லூரி மாணவன்

**நடராசா தார்மீகன்**

அவர்கள் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 138 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்ததையிட்டு அவரையும், அவருக்கு கல்வி கற்றுக் கொடுத்த ஆசிரியர்களையும், கல்லூரிச் சமூகத்தையும் பாராட்டுவதோடு, அவர் நல்லூர்க் கந்தன் அருளால் கல்வியில் மேலும் பல சிறப்புக்கள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

*212, சென்.பெனடிக்ற் வீதி.*
*அரியாலை* (9456)

அப்பா, அம்மா,
உற்றார், உறவினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கலைப்பீட மாணவன்


**மனோகரன் றதீஸ்குமார்(ரமணா)**

அவர்கள் நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 22ஆவது பட்டமளிப்பு விழாவில் நுண்கலைத்துறையில் பட்டம் பெற்றதையிட்டு அவரைப் பாராட்டுவதோடு, கல்வியிலும், வாழ்விலும் சிறந்து வாழ வாழ்த்துகின்றோம்.

முருகானந்தம் - பிரேமகலா
(அக்கா குடும்பம்)

*கோண்டாவில்.* (9452)

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்



**மேஜர் யூதன்/மதுவன்**

**இராசரத்தினம் சுகுமாரன்**

மண்ணுக்காய் 09.04.1974
மக்களுக்காய் 14.10.1999

எம் வானத்து சூரியனே!
உனை இழந்து காரிருளில் தவிக்கின்றோம்
நேற்றுப்போல் உள்ளது
நீ பேசிய வார்த்தைகள்
ஆற்றுவார் அற்று கண்ணீரை
ஆறாய் வடிக்கின்றோம்.

*ஆஸ்பத்திரி வீதி,*
*சங்கானை* (9455)

உன் அம்மா, உடன்பிறப்புக்கள்,
மச்சான், மருமக்கள்.

## மரண அறிவித்தல்

**கதிராமு சற்குணானந்தன்(சற்குணம்)**

உடுவில், இராமலிங்கம் வீதியைச் சேர்ந்த கதிராமு சற்குணானந்தன் (ஓய்வு பெற்ற ஊழியர்,பிரதேச சபை, சுன்னாகம்) நேற்று (13.10.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியம் (அன்ரி) அவர்களின் அன்புக் கணவரும், அதிஸ்டராசா, வீரமங்கை, சுந்தரபாமா ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்கினேஸ்வரன், பாக்கியநாதன், பத்மலோஜினியின் அன்பு மாமனாரும், சுவேதிகா, கிஸ்சன், தனிசிகா, யதுனா, துர்க்காயினி ஆகியோரின் அன்புப்பேரனும், பேபிராஜேஸ்வரி, தேவமங்களநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-10-2002) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
அதிஸ்டராசா
(பிரபு)

*இராமலிங்க வீதி,*
*உடுவில்.* (9453)


# வாணி விழா நிகழ்வுகள்

கைதடி,ஒக்.14

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் வாணி விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5.30 மணிமுதல் தலைவர் சி.கனகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-ரி)

★ ★ ★

வலிகாமம்தெற்கு,ஒக்.14

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை இந்து மன்றத்தினரால் நடத்தப்பட்டுவரும் நவராத்திரி தினவிழாவையொட்டிய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இன்று திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளன.

நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் விஜயதசமி பூசை வழிபாடுகளும், அதனைத் தொடர்ந்து வித்தியாரம்பம் (ஏடுதொடக்கல்) நிகழ்ச்சியும் நடைபெறும். (எ-152)

★ ★ ★

சுன்னாகம்,ஒக்.14

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தின் வாணிவிழா நாளை செவ்வாயன்று காலை 9 மணிமுதல் நடைபெறும். அதிபர் நா.சிவசிதம்பரலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்களில் ஏடு தொடக்கல், விசேட பூசை, கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும். (எ-27)

★ ★ ★

வலி.மேற்கு,ஒக்.14

வலி.மேற்கு (சங்கானை) பிரதேச செயலக அலுவலக நலன்புரிச் சங்கம் நடத்தும் வாணிவிழா இன்று காலை 10 மணிமுதல் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிர்வாக அலுவலர் எம்.சிவராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசனின் சிறப்புரை இடம்பெறும். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். (எ-175)

★ ★ ★

கோண்டாவில்,ஒக்.14

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் இந்து மாமன்றத்தினர் நடத்தும் வாணிவிழா இன்று காலை 9.30 மணியளவில் ரதிலக்ஷ்மி மண்டபத்தில் தலைவர் வி.செவ்வந்திநாதக் குருக்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக சீலத்திரு.அ.செல்லத்துரை சுவாமிகள் (சிவதொண்டன் நிலையம் யாழ்ப்பாணம்) கலந்துகொள்வார்.(எ)

★ ★ ★

நெடுந்தீவு,ஒக்.14

நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலை வாணிவிழா வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நாளை செவ்வாய்க்கிழமை காலை நடைபெறும்.(எ-111)

★ ★ ★

நெடுந்தீவு,ஒக்.14

நெடுந்தீவு மகா வித்தியாலய இந்து மாணவர் மன்றம் நடத்தும் வாணிவிழா நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிமுதல் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும். (எ-111)

★ ★ ★

கோப்பாய்,ஒக்.14

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி இந்து மன்றத்தால் நடத்தப்படும் வாணி விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணி முதல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுளளது.

சைவப்புலவர் ஏ.அனுசாந்தனின் சிறப்பு சொற்பொழிவு மற்றும் நாடகம், வில்லிசை உட்பட பல கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (எ-72

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.14

நெடுந்தீவு தபாலகத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிமுதல் வாணி விழா நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

தபாலதிபர், உபதபாலதிபர், சக ஊழியர்கள் ஒன்றிணைந்து இந்த விழாவை ஒழுங்கு செய்துள்ளனர். (எ)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.14

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் வாணி விழாவும் சரஸ்வதி சிலை திறப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணி முதல் நடைபெறவுள்ளன.

விழாவில் சிறப்பு நிகழ்ச்சியாக மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன் தலைமையில் 'காணி நிலம் வேண்டும் பராசக்தி' எனும் தலைப்பில் கவியரங்கம் இடம்பெறும். (எ)

★ ★ ★

குருநகர் ஒக்.14

யாழ். வலயக்கல்வி அலுவலக ஊழியர் நலன் புரிக்கழகம் நடத்தும் வாணிவிழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி முதல் நலன்புரிக் கழகத்தலைவர் நா.வரதராசா தலைமையில் அலுவலக மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகள் சிலவற்றின் மாணவ மாணவிகள் வழங்கும் கலை நிகழ்ச்சிகள் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறும். (எ-51)

★ ★ ★

வடமராட்சி,ஒக்.14

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி வாணி விழாவும், பரிசளிப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இந்து மன்றத் தலைவி சி.தாரணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இளைப்பாறிய மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி ம.திருநாவுக்கரசு பரிசில்களை வழங்குவார். (எ-173)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.14

அராலி அகாயக்குளம் விநாயகர் ஆலய இந்து மன்றம் நடத்தும் வாணிவிழா இன்று மாலை 5மணி முதல் ஆலய மண்டபத்தில் அறங்காவலர் சு.செந்தில்நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பண்டிதை சி.தையல்நாயகி, உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஸ்ரீதயாளன் ஆகியோரின் விசேட சொற்பொழிவு, பாட்டு, தனிநடனம், குழுநடனம், நாடகம் என்பன சிறப்பு நிகழ்வுகளாக இடம்பெறும். (எ)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.14

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை நலன்புரிச் சங்கம் நடத்தும் வாணிவிழா இன்று காலை 9மணிமுதல் உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ)

## குருநகரில் கசிப்பு விற்பனை; மக்கள் விசனம்

குருநகர் சென்.ஜேம்ஸ் வீதியிலுள்ள ஒரு வீட்டில் கசிப்பு தொடர்ந்து நடைபெற்றுவருவதாக குருநகரிலுள்ள பொது அமைப்புக்கள் தெரிவித்தன.

கசிப்பு அருந்துபவர்களால் இவ் வீதியினூடாகச் செல்லும் அப்பாவி மக்கள் மற்றும் பெண்களுக்கு தொல்லைகள் ஏற்பட்டு வருவதாகவும் -

கசிப்பு விற்பனை செய்யப்படும் இடத்துக்கு மிக அருகில் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயம் அமைந்துள்ளதனால் பாடசாலை மாணவர்களுக்கும் சிரமங்கள் ஏற்படுவதாகவும்-

இப்பொதுஅமைப்புக்கள் மேலும் தெரிவித்தன. இதே நேரத்தில் குருநகர் புதிய பூங்கா வீதியில் கசிப்பு விற்பனை செய்தவருடைய வீட்டினுள் புகுந்த இளைஞர் குழு ஒன்று அவ் வீட்டில் இருந்த 10போத்தல் கசிப்பை வீதியில் ஊற்றியதுடன், கசிப்பு விற்றநபரையும்எச்சரிக்கை செய்துள்ளது. (ஒ-51)

## கல்வியியற் கல்லூரி நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2003ஆம் ஆண்டில் மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சை முன் குறிப்பிட்ட திகதிகளில் நடைபெற ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன என யாழ்.கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் அறிவித்துள்ளார்.

மாணவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் -

அனுமதி பெறுவதற்கு விண்ணப்பித்து இதுவரை நேர்முகப் பரீட்சைக் கடிதம் கிடைக்கப்பெறாதவர்கள் தாம் விண்ணப்பித்த கல்லூரிகளுடன் தொடர்புகொண்டு கடிதங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

சங்கீதம், நடனம் ஆகிய துறைகளுக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் செய்முறைப் பரீட்சைக்கும் தோற்ற வேண்டியுள்ளதால் அதற்கான ஆயத்தங்களுடன் வருகைதரவேண்டும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. இராமலிங்கம் கேசவன்**

அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று (13.10.2002) ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற 22ஆவது பட்டமளிப்பு விழாவில் விஞ்ஞானமாணிப் (B.Sc.) பட்டம் பெறுவதையிட்டு அவரை மன மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மத்திய விளையாட்டுக்கழகம்,
[illegible]வரங்கால். (9423)

## வாழ்த்துகின்றோம்



**E.K.V.ஜோன்சன்**

B.Sc., Dip.in Ed.

பிரபல பௌதிகவியல் ஆசிரியர்
யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை


யாழ்.பல்கலைக்கழகத்தின் 22ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தினைப் பெற்ற எமது நண்பனை மனமார வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய நண்பர்கள்,
யா/யூனியன் கல்லூரி
தெல்லிப்பழை.

(9454)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலையைச் சேர்ந்த மாணவன்



**செல்வன் ச.நிறோசன்**

அவர்கள் 5ஆம் தரப் புலமைப்பரிசிற் பரீட்சை - 2002இல் 130 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்தமையையிட்டு எமது மகனைப் பாராட்டுவதுடன் அறிவூட்டி வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்து வாழ்த்துகின்றோம்.

- திரு.திருமதி சகாயராசா
குடும்பத்தினர்

சாவகச்சேரி. (c/24230)

# 3ஆம் ஆண்டு நிறைவு

தாயின் மடியில் வித்தாய் 30 - 04 - 1972



தாயக மண்ணில் விதையாய் 14 - 10 - 1999

எம் நெஞ்சங்களில் தெய்வமான

## மேஜர் இளஞ்செழியன்

(கனகசபை நற்சபேசன், ஆவரங்கால்)

மண்ணின் விடிவிற்காய்
மறக்குலத்து மறவனாய் - நீ
மரணித்த தாய்மண் உனை மறவாது
உன் நினைவு நாளிதனில் வலிகாம மண்
உனை வணங்குகிறது - நீ
மண்ணில் விதையுண்டாலும் வித்தானாய்.

உங்கள் பிரிவால் துயருறும்:
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (9451)
பப்பாமாமா, அம்மா, அண்ணன் பங்கஜன், தங்கை சமி, தம்பி குட்டிமணி.


# கரவெட்டியில் திருடர் நடமாட்டம் அதிகரிப்பு!

வதிரி, கரவெட்டி போன்ற பகுதிகளில் திருடர்கள் கத்தி, பொல்லு போன்ற ஆயுதங்களுடன் நடமாடுவதால பொதுமக்கள் பெரும் அச்சமடைவதாகத் தெரிவிககப்படுகிறது

தற்போது மழை இருட்டும் முக்கிய வீதிகளில் மின் விளக்குகள் இன்மையும் திருடர்களின் நடமாட்டத்திற்கு வசதியாக உள்ளதாகத் தெரியவருகிறது. அண்மையில் வதிரி ஆலக்கட்டை வீதிப் பகுதி, கரவெட்டி, அத்துருமுள்ளி போன்ற இடங்களில் இரவுவேளைகளில் நடமாடிய திருடர்களைப் பொதுமக்கள் விரட்டியடித்த சம்பவங்கள் குறிப்பிடத்தக்கவை.

(ஒ-70)

# பட்டமளிப்பு விழா கலை நிகழ்ச்சிகள்

யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு இராமநாதன் நுண்கலைக்கழக இசை, நடனத்துறை மாணவர்கள் இணைந்து வழங்கும் சிறப்புக் கலை நிகழ்ச்சிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணி முதல் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளன.

குழு இசை, இசைக்கோலம், லயக கோலம், ஆடல் அருவி போன்ற நிகழ்ச்சிகள் இதில் இடம்பெறவுள்ளன. இந் நிகழ்ச்சிகளில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று நடைபெற ஏற்பாடாகி இருந்த மேற்படி நிகழ்ச்சிகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் இன்றைய தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ-5)

# நெடுந்தீவில் மின்விநியோகம் தற்போதைக்குக் கிடையாது!

## அதிகாரி தகவல்

நெடுந்தீவு,ஒக்.14

நெடுந்தீவுப் பகுதிக்கான மின்விநியோகத்தை உடனடியாக ஆரம்பிக்க முடியாதநிலை தோன்றியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே இங்கு நடைமுறையில் இருந்த மின்விநியோகத்தை மின்சார சபை பொறுப்பேற்ற பின்னர் அது தனது விதிகளுக்கு அமைய பாவனையாளர்களிடம் இருந்து விணணப்பங்களைக் கோரியிருந்தது என்றும் -

எனினும் இதுவரை மிகக் குறைந்த அளவிலான விண்ணப்பங்களே கிடைக்கப்பெற்றதால் போதிய வருமானம் இன்றி மின்விநியோகத்தை வழங்க முடியாத நிலை இருப்பதாகவும் இலங்கை மின்சாரசபையின் வேலைணைப் பிரிவு உத்தியோகத்தர் தெரிவித்தார்.

மின்விநியோகத்திற்கென நெடுந்தீவு பிரதேச சபை முன்னர் ஆரம்ப கட்டணமாக சுமார் ரூபா ஆயிரம் அறவிடப்பட்டதாகவும் - தற்போது மின் இணைப்புக்கென ரூபா 5 ஆயிரம் முற்பணமாகச் செலுத்தவேண்டியிருப்பதால தாம் விண்ணப்பிக்க முடியவில்லை என்றும் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(எ-111)

# மாங்காய் ஊற்றை மேம்படுத்த புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை

கிளிநொச்சி,ஒக்.14

வன்னிப்பிரதேசத்தில் 'கிராம தரிசனம்' திட்டத்தின்கீழ் இனங்காணப்பட்ட மிக வறிய மக்கள் வாழும் கிராமமான மாங்காய் ஊற்று கிராமத்தை மேம்படுத்தி, மக்களை சகல அடிப்படை வசதிகளுடனும் வாழ வழி செய்யும் நோக்குடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அங்கு புனர்வாழ்வு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

குடியிருப்பு, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து என அடிப்படை வசதிகள் எதுவுமற்று மிகவும் பின்தங்கிய கிராமமாக மாங்காய் ஊற்றுக் கிராமம் தற்போது உள்ளது. அன்றாட ஜீவனோபாயத்திற்கு வழியின்றி ஏங்கும் நிலையில் மக்கள் அங்கு வாழ்ந்து வருகின்றார்கள்.

முதற்கட்டமாக அம்மக்களின் உடனடித் தேவையான குடியிருப்பு வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மாங்காய் ஊற்று கிராமத்தில் 164 வீடுகளை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (ஒ)


# VACANCIES

**TECHNICIANS/TRAINEE TECHNICIANS**

**MARKETING EXECUTIVE/TRAINEES**

With qualification in the respective fields, Having higher qualifications would be an advantage for employment. If you wish to work in Colombo, apply or walk-in. Accommodation will be provided.

**The Manager Human Resources,**
**THAMPI Communication,**
*90, Kanthappasegaram Road,*
*Jaffna.*

(C/24224)



# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 413 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு |
| திகதி | 11.10.2002 | செல்லுபடியாகும் தொடர் இல. 5501159-5513475 |

வெற்றி இலக்கங்கள் **09 12 13 46**

லக்கினம் கடகம்



ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,601,500/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 269,416 | 10 | 2,694,180 |
| 2 இலக்கங்கள் | 24,710 | 20 | 494,200 |
| 1 இல + லக்கினம் | 24,413 | 30 | 732,390 |
| 2 இல + லக்கினம் | 2,236 | 100 | 223,600 |
| 3 இலக்கங்கள் | 655 | 500 | 327,500 |
| 3 இல + லக்கினம் | 72 | 5,000 | 360,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 321,508 | - | 5,231,870 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 5,231,870/-

தொடர் இல. 4516542க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2002 ஒக்டோபர் 15ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் ... வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5503325-3-71
5501898-8-22
5501503-4-75
5509500-7-41
5513474-3-84

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்றல் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3102200 இருந்து 3119451 வரை

சீட்டிழுப்பு இல. 1340

திகதி 12.10.2002

## வெற்றி எண்கள்

**02 29 31 42 45**

போனஸ் எண் **50**

## ஜக்பொட் பரிசு

ரூபா.3,239,250/- வெல்லப்படவில்லை.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 3,239,250/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 04 | 100,000/- | 400,000/- |
| 4 | 113 | 10,000/- | 1,130,000/- |
| 3 | 5,563 | 500/- | 2,781,500/- |
| 2 | 90,967 | 20/- | 1,819,340/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 02ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 111,146 | 10/- | 1,111,460/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,242,300/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்

ரூபா. 4,100,950/-

தொடர் இல. 2122963க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2002 ஒக்டோபர் 16ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்றல் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3113626-0-55
3107230-2-65
3103579-7-54
3103524-0-15
3111369-3-41

## THAMPI Links with LIONAIR

உங்களின் சௌகரியமான பயணத்திற்கு பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட

**BRITISH AEROSPACE HS 748 AIRCRAFT .......**
**ROLLS ROYCE ENGINES .......**
**SAFETY & COMFORT .......**
**WARM HOSPITALITY.......**

Tickets available for Rs. 1,999/=

விசாரணைகளுக்கு அழையுங்கள் .......

01-343125, 021-2222504

HOTLINE: 072-401423, 077-7382343. (C-24227)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



13.10.2002அன்று கௌரவ கலாநிதிப் பட்டம்பெறும் எமது தேவஸ்தான திருப்பணிச் சபைப் பொருளாளரும், தொண்டருமான பட்டயக் கணக்காளர்

**திரு.அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை**

அவர்களை மேன்மேலும் பல சேவைகள் ஆற்றி, பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வேண்டுமென்று புலோலிப் பசுபதீஸ்வரனை மனமார வேண்டி வாழ்த்துகின்றோம்.

*புலோலி மேற்கு, பருத்தித்துறை.* (9444) தேவஸ்தான அறங்காவலர்களும் தொண்டர்களும்.

## நான்காம் ஆண்டு நினைவுடன்

மண்ணில் 05 - 03 - 1929



விண்ணில் 30 - 09 - 1998

**அமரர் ஐயாத்துரை இளையாச்சி**

(தையிட்டி - காங்கேசன்துறை)

திதி: 14.10.2002 (நவமி)

தரையில் நடந்த நாம் வானில் பறக்கிறோம் - உன்னால் தானம்மா.

*49/4A, யாழ்.வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணம்.* நினைத்து வாழும்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (9449)

## ஏழு நாள்களுக்கு அன்பு வாரம்

மண்டைதீவு,ஒக்.14

இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரையிலான 7 நாள்களையும அன்புவாரமாகக் கொண்டாட வடபிராந்திய சத்திய சாயி பாபா நிறுவனங்களின் இணைப்புக் குழுவினர் ஏற்பாடு செய்துள்ளனர். அன்புவாரத்தையொட்டி பாடசாலை மாணவரிடையே கவிதை மற்றும் கட்டுரைப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன. (ஓ-ரி)


## நியூ கல்வி நிறுவனம்

K.K.S. வீதி, இணுவில்

தரம் 04 - 2003
புலமைப் பரிசில் வகுப்பு
By: இ.கஜேந்திரன்

**ENGLISH CLASS**
தரம் 4 - 11 வரை
By: G.பகிரதன்

ஆரம்பம்: 15.10.2002 4.30p.m.
(பிரிவில் 25 மாணவர்கள் மட்டும் அனுமதி)

வெளிக்கள போதனாசிரியர் (G.S.) கிராம அலுவலர் பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன.
புதன், சனி, ஞாயிறு
3.30p.m. - 5.00p.m.
(9447)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர். *சகல வியாதிகளையும் குணப்படுத்துவர்:*

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
*தொலைபேசி எண்: 2222459* (4648)


## மனமுவந்து வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று (13.10.2002) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின்போது "கலைமாணி" பட்டம்பெற்ற உடுவிலைச் சேர்ந்த

**செல்வி பத்மநாதன் கஜனி**

அவர்களை மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கந்தரோடை, சுன்னாகம். வாழ்த்துவோர்: பரமானந்தன் குடும்பத்தினர் (9446)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஞாயிற்றுக்கிழமை (13.10.2002) நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெற்ற எமது நிர்வாக உறுப்பினரும் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அதிபருமான

**உயர்திரு.வே.பாலசுப்பிரமணியம்**

B.A.(Hons) M.Ed.

அவர்களைப் பாராட்டி அவர் மேலும் பல உயர் பட்டங்களைப் பெற்று, சிறப்புடன் வாழ வேண்டுமென்று எல்லாம்வல்ல உலவிக்குளம் சித்திவிநாயகப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றோம்.

(9445) மத்திய ச.ச.நிலையத்தினர், அச்சுவேலி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



13.10.2002 ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் "தத்துவ கலாநிதி" என்ற கௌரவப் பட்டம் பெற்ற காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தைச் சார்ந்த மூதறிஞர்

**சிவஸ்ரீ கணபதீஸ்வரக்குருக்கள் வைத்தீஸ்வரக் குருக்கள்**

அவர்களை நீண்ட ஆயுளுடன் பல காலம் வாழ்ந்து இன்னும் பல தொண்டுகள் ஆற்ற நடராஜப்பெருமான் அருள்புரிய வேண்டும் எனப் பணிந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*இணுவில் கிழக்கு* (9432) சாம்பசிவ ஐயர் சிற்சபேச சர்மா *(காரைநகர்)*




## புதிய இசை வகுப்புகள்



நாளை விஜயதசமி நாளில் ஆரம்பமாகவுள்ளன!

| | | |
|---|---|---|
| ❖ வீணை | ❖ புல்லாங்குழல் | ❖ கிற்றார் |
| ❖ வயலின் | ❖ நடனம் | ❖ மெலோடிக்கா |
| ❖ வாய்ப்பாட்டு | ❖ ஓர்கன் | ❖ மௌத்ஓர்கன் |
| ❖ சித்திரம் | ❖ மிருதங்கம் | ❖ றெக்கோடர் |

ஆரம்பமாகும் இடமும் நேரமும்:
16/2, கச்சேரி - நல்லூர் வீதி - 4.30p.m. - 8.00p.m.
ஆலடி, உயரப்புலம், ஆனைக்கோட்டை 4.30p.m. 5.30p.m.
கோப்பாய் மத்தி (பெற்றோல் செற் முன்பாக) 3.30p.m. - 4.30p.m.

தொடர்பு: செல்வி வாசுகி ரங்கன்

**நியூ வீணாகானம்**
16/2, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்நகர். (9441)


## சாவகச்சேரி பிரதேச சபை - கொடிகாமம்

# கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் முதலாம், இரண்டாம் வேலைகளுக்கு I.C.T.A.D. (இக்ராட்) பதிவுப் புத்தகமுள்ளவர்களிடம் இருந்தும் மற்றைய வேலைகளுக்கு இவர்களுடன் அனுமதிக்கப்பட்ட உள்ளூர் பொது நிறுவனங்களிடமிருந்தும் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் 23.10.2002 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை *'தலைவர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்'* என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை *'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்'* என்ற முகவரிக்கும் எதிர்வரும் 23.10.2002ஆம் திகதி ந.ப.12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ, பதிவுத் தபால்மூலமோ கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

| வேலையின் பெயர் | கேள்வி வைப்பு பணம் | கேள்வி பத்திரம் பணம் | பெறுமதி கூட்டல் வரி 20% (VAT) |
|---|---|---|---|
| 01.சாவகச்சேரி மட்டுவில் மனுவளை மோகனதாஸ் சனசமூக நிலையப் புனரமைப்பு | 3500.00 | 500.00 | 100.00 |
| 02.உசன் விடத்தற்பளை வீதி புனரமைப்பு | 3000.00 | 500.00 | 100.00 |
| 03.கைதடி கள்ளக்காடு 'யான' அறிவொளி பாலர் பாடசாலை கட்டடத் திருத்தம். | 500.00 | 200.00 | 40.00 |
| 04.வரணி மத்திய சனசமூக நிலைய கட்டடத் திருத்தம் | 500.00 | 200.00 | 40.00 |

மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணத்தினையும் மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணத்தினையும் செலுத்துவதன் பேரில் 21.10.2002ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். இது சம்பந்தமாக மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

*சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.*
11.10.2002 (சி-24225)

அன்ரன் பொன்னையா
தலைவர்,
சாவகச்சேரி பிரதேச சபை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 - 05 - 1966



உதிர்வு 26 - 09 - 2001

**அமரர் முத்துலிங்கம் சதீஸ்குமார் (சசி)**

*(சந்நிதி முருகன் ஓட்டோ உரிமையாளர்)*

திதி: 14.10.2002 (நவமி)

கண்மணிகள் இருவரையும் கண்ணீரில் கலங்கவிட்டு மண்ணகத்தில் மனைவியுடன் மகிழ்ந்து மணம் வீசாது எண்ணமதில் நிறைந்த "சசி" ஏங்கும் எமைவிட்டு விண்ணக வாழ்விற்கு விரைந்து நீ சென்றதேனோ?

*விளையாட்டரங்க வீதி, கட்டப்பிராய், கோப்பாய் தெற்கு,கோப்பாய்.* (9450) - குடும்பத்தினர்.

# 400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் இலங்கைக்கு வெண்கலப்பதக்கம்!

14 ஆவது ஆசிய விளையாட்டு விழாவின் ஆண்களுக்கான 4X400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் இலங்கை அணி வெண்கலப் பதக்கத தைப் பெற்றது.

நேற்று நடைபெற்ற இப்போட்டியில் இலங்கை அணி தங்கப் பதக்கம் பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், போட்டியின்போது வீரர்களின் தடுமாற்றங்கள் இந்த எதிர்பார்ப்பைத் தகர்த்தது. சனிக்கிழமை நடைபெற்ற அரையிறுதிப் போட்டிகளின் பெறு பேறுகளின் படி இலங்கை அணி 3 நிமிடம் 4.78 செக்கன்களில் ஓடி முன்னணியில் திகழ்ந்தது.

இறுதிப் போட்டி இலங்கை நேரப் படி நேற்றுக் காலை 8 மணிக்கு நடைபெற்றது. முதல் சுற்றில் ஓடிய இலங்கை வீரர் ரோஹான் பிரதீப் குமார தமது வழக்கமான வேகத்தில் ஓடவில்லை. எனினும் இரண்டாவது சுற்று முடிவில் ரங்க விமலவன்ஸ, இலங்கையை முன்னணிக்குக் கொண்டு வந்தார். ஆனால் அவர் பிரசன்ன அமர சேக்கர விடம் அஞ்சலோட்டக் கோலைக் கொடுப்பதில் ஏற்பட்ட தாம தத்தால் இலங்கை மூன்றாவது இடத் திற்குத் தள்ளப்பட்டது. இறுதிச்சுற்றில் சுகத் திலகரத்ன பெரு முயற்சி செய்த போதிலும் மூன்றாமிடத்தையே இலங்கை பெற்றது.

இவ்வணி 3 நிமிடம் 4.37 செக் கன்களில் ஓடி முடித்தது. சவூதி அரே பியா 3 நிமிடம் 2.47 செக்கன்களில் ஓடி முதலாமிடத்தையும் இந்தியா 3 நிமிடம் 4.22 செக்கன்களுடன் இரண் டாமிடத்தையும் பெற்றன.

இதேவேளை பெண்களுக்கான 4X100 மீற்றர் அஞ்சலோட்டப் போட் டியில் இலங்கை பங்குபற்றவில்லை. போதிய வீராங்கனைகள் இல்லாமையே இதற்குக் காரணம்.

இப்போட்டியில் சீன அணி தங்கப் பதக்கம் வென்றது.

ஆண்களுக்கான 4X400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் தாய்லாந்து தங்கப் பதக்கம் வென்றது. பெண்களுக்கான 4X400 மீற்றர் அஞ்சலோ ட்டத்தில் இந்தியா தங்கப்பதக்கத்தை வென்றது. கஸகஸ்தான் வெள்ளிப் பதக்கத்தை யும், சீனா வெண்கலப்பதக்கத்தை யும் பெற்றன.

# இன்றைய ஆட்டங்கள்

வலிவடக்கு,ஒக்.14

தென்மராட்சி வலயப்பாடசாலை அணிகளுக்கிடையிலான உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணி முதல் சாவகச்சேரி இந்துக் கல்லூரி யில் நடைபெறவுள்ளன.

### 14 வயதுப்பிரிவு

★ மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் எதிர் மட்டுவில் சந் திரபுரம் ஸ்கந்தவரோதய மகா வித்தி யாலயம்.

★ நாவாந்துறை மகாவித்தியா லயம் எதிர் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

### 16 வயதுப்பிரிவு

★ சாவகச்சேரி இந்துக்கல்லூரி எதிர் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி

★ வரணி மகா வித்தியாலயம் எதிர் கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்.

★ கச்சாய் அ.த.க. பாடசாலை எதிர் மீசாலை வீரசிங்கம் மகா வித் தியாலயம். (ஐ-9-86)


மாவை கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவில்

மானம்பு உற்சவம்

நாளை காலை மானம்பு உற்சவம் நடைபெறும். காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை தடைமுகாமிற்கு வரவும். அழைத்துச் செல்ல ஏற்பாடு செய் யப்படும். அன்னதானமும் நடைபெறும்.

(C/24235) - அறங்காவலர்.



வினையுயர வெற்றித் திருவுயரும்

திரு.இ.சண்முகேஸ்வரன்

[B.Sc., Dip.in Ed., M.Ed.]

ஏறு முன்னேறென எம்மாசான்
இ.சண்முகேஸ்வரன அவர்கள்
முது கல்விமாணி பெற்றிட்ட
ஏற்றங்கண்டு மனதார
வாழ்த்துகின்றோம் மாணவர் நாம்.

உயர்தரமாணவர் மன்று
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

(9461)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2002 இல் சித்தியடைந்த

செல்வன் அ.அனுஸ்ரன் - 144 புள்ளிகள்


செல்வன் ச.நிரோசன் - 130 புள்ளிகள்

ஆகிய மாணவர்களையும், வெட்டுப்புள்ளிகளுக்கு அண்மித்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன், இவர்களுடைய கல்வி, ஒழுக்கம் மேன்மேலும் சிறப்புற இறைவனை வேண்டுகிறோம். அத்துடன் இம்மாணவர்களுடைய வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுவதில் பெருமகிழ்வு அடைகின்றோம்.

(C/24231) பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.



பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருநெல்வேலி கிழக்கு, வெள்ளைப் பிள்ளையார் கோயில் வீதியைச் சேர்ந்த பிரபல சமூகசேவையாளரும், ஆசிரியருமான

சின்னத்தம்பி பத்மராசா (J.P.)

யாழ். பல்கலைக்கழகத்தின் 22 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றதையிட்டு அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

சி.பத்மராசா(ச.நீ.)
B.A.(Cey),P.G.Dip.in.Edu.)

திரு.திருமதி S.ரமேஷ்(ச.நீ.)
நவாலி,
உள்ளூராட்சிமன்ற உதவியாளர், மானிப்பாய்.

(9457)



எங்கள் அதிபரை வாழ்த்துகின்றோம்



திருமிகு சு.சண்முககுலகுமாரன்

[B.A., Dip.in Edu., S.L.P.S.,M.Edu.]

எமது அதிபர், யாழ்.பல்கலைக்கழகத்தின் 22ஆவது பட்டமளிப்பு விழாவில் கல்வியியல் முதுமாணிப் பட்டம் பெற்றதையிட்டு நாம் பெருமைப்படுவதுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உபஅதிபர், ஆசிரியர்கள்,
யா/சங்குவேலி
அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.

சங்குவேலி, மானிப்பாய். (9460)


# விளையாட்டு

## கராத்தேயில் இலங்கைக்கு வெண்கலம்

ஆண்களுக்கான தனிநபர் கராத்தே போட்டியொன்றில் இலங்கை வீரர் ஆர். ஜே.எட்வர்ட் வெண்கலப் பதக்கத்தை வென்றார். 27 வயதான எட்வர்ட், கராத்தே காட்டா பிரிவில் பாகிஸ் தான் வீரர் .:பர்மான் அஹமட்டை 3-0 விகிதத்தில் வென்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றார்.

ஆசிய விளையாட்டு விழாவில் கராத்தே போட்டியில் இலங்கை பதக் கம் பெற்றமை இதுவே முதல் தடவை யாகும்.

15 பேர் கொண்ட அணிகளுக் கிடையிலான ரகர் போட்டியில் ஹரிஸ் ஓமர் தலைமையிலான இலங்கை அணி வெண்கலப் பதக்கத்தை தவற விட்டது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் இலங்கை - தாய்வான் அணிகள் மோதின. இப்போட்டியில் தாய்வான் அணி 56-18 விகிதத்தில் வென்றது. (ஐ)

# இராமேஸ்வரத்தில் கைப்பற்ற.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடர் கழகத் தலைவர் கே.எம்.சிகா மணி, அவரது கடையில் வேலை பார்த்த பாபு, காந்தி மற்றும் கூலித் தொழிலாளிகளான பாலகிருஷ்ணன், ரங்கசாமி ஆகியோரை பொலீஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

தமிழகத்தில் முதல் முறையாக ஒரு தனி நபரிடம் இருந்து ரொக்கெட ஏவுகணை போன்ற பயங்கர ஆயுதம இவ்வாறு பிடிபட்டதைத் தொடர்ந்து இவ்வழக்கு சி.பி.சி.ஐ.டி. பொலீஸா ருக்கு மாற்றப்பட்டது.

இவ்வழக்கினை ஏற்றுக்கொண்ட சி.பி.சி.ஐ.டி. பொலீஸார், இவ் வழக் குத் தொடர்பாக சிறைவைக்கப்பட்டி ருந்த சிகாமணி உள்ளிட்ட நபர்களி டம் விசாரணை மேற்கொண்டனர். இந்த விசாரணையைத் தொடர்ந்து சி.பி.சி. ஐ.டி. பொலீஸார் கடந்த சில நாள்க ளுக்கு முன் இராமேஸ்வரத்தில் முகா மிட்டு பல முக்கிய புள்ளிகளை விசா ரணைக்காக பிடித்துச் சென்றனர். இரா மேஸ்வரத்தில் பாத்திர வியாபாரம் செய்து வருபவரும், மாவட்ட காங் கிரஸ் செயலாளருமான ராஜாமணி, அவரது உறவினர்கள் துரை. சந்திரன், காங்கிரஸ் பிரமுகரான சகாயராஜ் மற்றும் விஜயபாண்டி ஆகிய 5 பேர் இதில் அடங்குவர். இவர்களிடம் பொலீ ஸார் நடத்திவரும் விசாரணையில் பல முக்கிய - திடுக்கிடும் - தகவல் கள் வெளியாகிவருகின்றன.

1999ஆம் ஆண்டு நடந்த பொது தேர்தலின் வாக்கு எண்ணிக்கை தினத தன்று இரவு இராமேஸ்வரம் கடற் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைக் கடற்படையினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது.

இராமேஸ்வரம் ஓலைக்குடா கிரா மக் கடற்கரையில் இருந்து சுமார் 2 கிலோமீற்றர் தொலைவில் கடலுக் குள் நடந்த இந்தத் துப்பாக்கிச் சண்டையில் இலங்கை இராணுவத்தி னர் பயன்படுத்திய துப்பாக்கிக் குண்டு கள் ஓலைக்குடா கிராமத்தில் உள்ள பல வீடுகள் மற்றும் பனை மரங்கள் மீது பாய்ந்து சேதத்தை ஏற்படுத்தின.

விடுதலைப் புலிகளின் படகில் இருந்த இருவர் உயிரிழந்த நிலையில் அவர்களின் படகு இராமேஸ்வரம் கரையை அடைந்தது. மற்றவர்கள் கரையேறித் தப்பிவிட்டனர். இதனைக் கண்ட இலங்கைக் கடற்படையினரும் சிறிது தொலைவிலே திரும்பிவிட் டனர். இச்சம்பவத்தைக் கண்ட இந்தி யக் கடற்படையினர் ஓலைக்குடாப் பகுதிக்கு வந்து கரையில் ஒதுங்கிக் கிடந்த படகினையும் அதில் பலியா கிக் கிடந்த புலிகளின் சடலங்களை யும் கைப்பற்றினர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து இந்தி யக் கடற்படையினரும் பொலீஸாரும் கரையேறித் தப்பிஓடிய விடுதலைப் புலிகளை விடியவிடியத் தேடினர். ஆனால், அவர்கள் யாரும் சிக்க வில்லை. இந்த நிலையில் போராளி கள் தப்பி ஓடியபோது தமது ஆயுதங் களைக் கொண்டு சென்றனரா? அல்லது ஓலைக்குடாக் கிராமப்பகுதியில் மறைத்து வைத்துவிட்டு தப்பிச் சென்ற னரா? என்பது குறித்து புலனாய்வுப் பொலீஸார் விசாரணை நடத்தி வந்த னர்.

சில மாதங்கள் கழித்து, இவ்விசார ணையின் விளைவாக ஓலைக்குடாத தோப்பு ஒன்றில் இருந்து எஸ்.எம்.ஜி. துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டது. இதன்பின் இது தொடர்பான விசா ரணை தொடராமல் முடிந்து போனது.

அந்தச் சம்பவத்தின்போது விடு தலைப் புலிகளால் கொண்டு வரப்பட்டு விட்டுச் சென்ற ஆயுதங்களுள் தற் போது பிடிபட்டுள்ள ரொக்கெட் ஏவு கணையும் ஒன்றா? புலிகள் விட்டுச் சென்ற ரொக்கட் ஏவுகணையைக் கண்ட இப்பகுதியில் உள்ள கடத்தல் புள்ளிகள் சிலர் அதை மறைத்து வைத்திருந்து கடந்த மாதம் கடத்த முயன்றபோது அது சிக்கிக் கொண் டதா? - எனவும் புலனாய்வு விசாரணை கள் நடக்கின்றன.

மேலும், விடுதலைப் புலிகளின் ஊடுருவல் சம்பவத்தின்போது விட் டுச் செல்லப்பட்ட ஆயுதங்கள் சில ஓலைக்குடாக் கடற்கரைப் பகுதி களில் பதுக்கி வைக்கப்பட்டிருக்க லாம் எனப் புலனாய்வுத் துறையினர் கருதுவதால் இப்பகுதியில் தொடர்ந் தும் சோதனையும் விசாரணையும் நடததப்பட்டு வருகின்றன.

இவ்விசாரணையின் முடிவில் ரொகெட் சம்பவத்தில் ஈடுபட்டுள்ள கடத்தல் புள்ளிகளும் அதற்குத் துணையாக இருந்ததாகக் கருதப்ப டும் அதிகாரிகளும் கைது செய்யப்ப டும் நிலை உள்ளது.

இதற்கிடையில் -

ரொக்கெட் ஏவுகணை மற்றும் போதைப் பொருள்கள் வைத்திருந் ததாக மாவட்ட தி.க.தலைவர் சிகா மணி உள்ளிட்ட 5 பேர்களை கைது செய்து வழக்குப் பதிவு செய்த பொலீஸ் அதிகாரி, கடந்த வியாழக் கிழமை இரவோடு இரவாக இராமேஸ் வரத்தில் இருந்து திருநெல்வேலிக்கு மாற்றப்பட்டார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

- இப்படி அந்தச் செய்தி மேலும் தெரிவித்தது. (ஐ)


தவறிவிட்டது

யாழ். பள்ளிவாசலுக்கும் - இணுவிலுக்கும் இடையில் மூக் குக் கண்ணாடி ஒன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் முகவரியில் ஒப்ப டைத்து உதவவும். (9462)

சியானாஸ்
77,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



கன்னாகம்

விஜயகாந்த், கார்த்திக், மீனா நடித்த

தேவன்

(நீலம்)

காட்சிகள் : 11.00, 3.00 (பு.நே.) (C/24225)



ராஜா யாழ்ப்பாணம்.

இன்று முதல்

விஜய், சந்தியா, விவேக் நடித்த

யூத்

காட்சிகள் : 10.10, 2.30, 6.30 (C/24065)



சங்கானை

விக்ரம், காவேரி நடிப்பில்

காசி (நீலம்)

காட்சிகள்: 11.00, 2.30, 6.00 (புதியநேரம்) (C/24140)



குழு புகைப்படம் எடுத்தல்

13.10.2002 அன்று வணிகமாணி பட்டம் பெற்ற அனைத்து பட்டதார மாணவர்களையும் (97/C) குழு புகைப்படம் எடுப்பதற்காக CLOAK, GARLAND என்பவற்றுடன் 14.10.2002 இன்று திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு பல்கலைக்கழக நிர்வாக மண்டபத்தின் முன்பாக சமுகமளிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

(9459) - பிரதிநிதி.



கண்ணீர் அஞ்சலி

எமது சனசமூக நிலையத்தின் உப செயலாளர்

திரு.பா.செல்வபாலனை அவர்களின் அருமைத் தாயார்

திருமதி பாலசுப்பிரமணியம் செல்லம்மா

சிவபதம் அடைந்ததையிட்டு எமது நிலையத்தின் சார்பில் அஞ்சலி தெரிவிப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சதாவதானி கதிரவேற்பிள்ளை
சனசமூக நிலையம்,
தம்பசிட்டி, பருத்தித்துறை.

(C/24233)



மரண அறிவித்தல்

ஜெயக்குணபாலன் பிரதீபன்

அல்லைப்பிட்டி, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாக வும் கொண்ட ஜெயக்குணபாலன் பிரதீபன் (ராஜா) 12.10.2002 சனிக் கிழமை அகாலமரணம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெயக்குணபாலன் வரலட்சுமி தம்பதி களின் அன்பு மகனும், ஜெயதீபன் அவர்களின் அன்புச் சகோதரனும், தில்லையம்பலம் சிவக்கொழுந்து அவர்களின் பூட்டனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - ஞானலட்சுமி தம்பதிகளின் பேரனும், விமல சூரியன் அவர்களின் மருமகனும், திருச்செல்வம், யோகலட்சுமி (செல்வம் ஸ்ரோர்ஸ்), முரளீஸ்வரன் (ஈசன்) கிருஸ்னேஸ்வரன் (நேசன்) ஆகியோரின் பெறா மகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2002) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*2ஆம் வட்டாரம்,*
*அல்லைப்பிட்டி.*

தகவல்:-
கி.கிருஸ்னேஸ்வரன்
(சிறியதந்தை)

(C/24232)

# கிழக்கில் புலிகள் ஆயுதம்தரித்து நடமாட அனுமதிக்கப்பட வேண்டும்!

## நிலைமையைப் பார்வையிட்ட அமைச்சர் மகேஸ்வரன் தெரிவிப்பு

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மகளுடைய பாதுகாப்பு கேள்விக்குரியதாகவே உள்ளது. எனவே, அங்கு விடுதலைப் புலிகளை ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்கப்பட வேண்டும்.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திருகோணமலை அன்புவெளிபுரத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஹர்த்தாலின்போது பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட கிரனேட் வீச்சு மற்றும் துப்பாக்கிச்சூட்டு தாக்குதல்கள் குறித்து நேரில் ஆராய மூன்று அமைச்சர்கள் நேற்று திருமலை சென்றனர்.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, உல்லாசப் பயணத்துறை அமைச்சர் காமினி லொக்குகே மற்றும் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோரே நேற்று திருமலைக்குச் சென்றனர்.

நேற்றைய விஜயம் தொடர்பாக பி.பி.ஸியின் தமிழோசைக்கு பேட்டியளித்தபோதே அமைச்சர் மகேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில் -

நேற்றைய கலந்துரையாடலின் போது நாம் முக்கியமாக சில முடிவுகளை மேற்கொண்டோம்.

நாளைமறுதினம் புதன்கிழமை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெறும் கலந்துரையாடலின் போது மூவர் கொண்ட குழுவொன்றை அரச அதிபர் தலைமையில் அமைத்தல் -

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது இருப்பதை இக்குழு உறுதி செய்தல், மீறி நடைபெறும்போது ஏற்படும் ஒழுங்கீனங்களைச் சீர்செய்தல்.

ஆகிய விடயங்கள் குறித்தே முடிவு எடுக்கப்பட்டது - இவ்வாறு மகேஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை -

பாதுகாப்புப் படையினரே பொது மக்கள்மீது துப்பாக்கியால் சுட்டு குண்டுகளை வீசினர் என்று அமைச்சர் தி.மகேஸ்வரன் குற்றஞ்சுமத்த முடியாது என்றும் -

எதிர்காலத்தில் இடம்பெறும் ஆட்சேர்ப்பில் தமிழர்களை பொலீஸில் சேர்த்துக் கொள்வதென அரசு முடிவெடுத்துள்ளதாகவும் -

பி.பி.ஸியின் சிங்கள சேவையான சந்தேஸியவுக்கு வழங்கிய செவ்வியில் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறியுள்ளார். (ஐ-9-12)

### பல்கலைக்கழக அனுமதி விண்ணப்பப் படிவம்

வடமராட்சி,ஒக்.14

எதிர்வரும் 2003 - 2004 ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்குரிய விண்ணப்பப் படிவம் இன்று முதல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முகவரான பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்றுக் கொள்ளலாம் - என்று தெரிவிக்கப்பட்டது.

2001, 2002 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜி.சீ.ஈ (உயர்தர)ப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-173)

### அன்ரனாவைத் திருப்பியோர் மின்சாரம் தாக்கி மரணம்!

கொழும்பு,ஒக்.14

அன்ரனாவைத் திருப்ப முயன்ற இரு இளைஞர்கள் அந்த அன்ரனா அருகில் இருந்த மின்கம்பிமீது விழுந்ததால் மின் தாக்கிப் பரிதாபமாக உயிரிழந்தார்கள்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தெளிவின்மையாக இருந்தமையால் அன்ரனாவை சரியான திசைக்குத் திருப்ப முயன்றபோதே இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

இந்தச் சம்பவம் மின்னேரியாவிலுள்ள ரஜவெல என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

வீட்டுக்கு வெளியிலுள்ள நீர்த்தாங்கிக்கு மேலே ஏறி நின்று கொண்டு அன்ரனாவைத் திருப்புவதற்கு முயன்ற போது அது அருகிலுள்ள மின்சாரக் கம்பியில் விழுந்துள்ளது. இதனால் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் நீர்த்தாங்கிக்குள் தூக்கி வீசப்பட்டு உயிரிழந்தார். மற்றைய இளைஞர் நீர்த்தாங்கிக்கு வெளியே தூக்கி வீசப்பட்டு உயிரிழந்தார். (ஐ)

### ஐந்து தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

17), தங்கத்துரை மேகன் (வயது 17) ஆகிய இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ளவர்கள் ஆவர். இவர்கள் அனைவரும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள புதூர், மல்வத்தைப் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் கிராமப்பகுதியில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர். இப்பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் இவர்கள் நடமாடியதைக் கண்ட கிராமத்தவர்களே பொலீஸாருக்கு இவர்கள் பற்றிய தகவல் கொடுத்தனர் எனப் பொலீஸ் தலைமையகம் தெரிவித்தது. (ஐ-9-12)

### 2 நாள்களாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யினரும் வீதிகள் எங்கும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அவசர தேவைகளுக்காக மக்கள் ஓட்டோ, மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி என்பவற்றில் பயணம் செய்கின்றனர். நகர வாழ்க்கை ஸ்தம்பித்துள்ளதால் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

**மட்டக்களப்பில்**

மட்டக்களப்பு மாவட்டத்திலும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. முஸ்லிம் பிரதேசங்களில் உள்ள ஒரு சில கடைகள் மட்டுமே திறக்கப்பட்டிருந்தன. எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை.

அமைதியான முறையில் இரண்டு நாள்கள் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்ப் பிரதேசங்களில் சகல கடைகளும் அடைக்கப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்து முற்றாக இடம்பெறவில்லை; சனநடமாட்டமும் இல்லை. பொதுவாக மட்டக்களப்பு மாவட்டமே ஸ்தம்பித்த நிலை அடைந்திருந்தது.

**திருகோணமலையில்**

திருமலைப் பொதுமக்கள் ஒன்றியம் விடுத்த அழைப்பின் பேரில் நேற்றும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

திருகோணமலையில் நேற்று முன்தினம் காலை 8 மணியுடன் பொலீஸ் ஊரடங்கு நீக்கப்பட்டது. ஆனாலும் பொதுமக்களின் நடமாட்டத்தை செறிவாகக் காணமுடியவில்லை.

திருகோணமலை ஹர்த்தாலில் கொல்லப்பட்ட இருவரின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன. இதன்போது அசம்பாவிதங்கள் ஏற்படலாம் என்ற ஒரு பீதிநிலை நிலவியது. ஆனால், எதுவும் இடம்பெறவில்லை. புரட்டாதிச் சனிக்கிழமையான நேற்றுமுன்தினம் மடத்தடி சனீஸ்வரன் ஆலயத்துக்குப் பக்தர்கள் சென்று வந்தனர். ஆங்காங்கே பொலீஸ், இராணுவ ரோந்து நடவடிக்கைகள் இடம்பெற்றன. 'பீஸ்ட் பைக்' இராணுவ அணியினர் தெருக்களுக்குக் குறுக்கே போடப்பட்ட மரக் குற்றிகளையும் ஹர்த்தாலின்போது எரிந்த கட்டைகளையும் கற்களையும் அப்புறப்படுத்தினர்.

கடைகள், வீடுகள் உட்பட அனைத்து இடங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு நகர் சோகமாகக் காட்சியளித்தது.

யாழ்.குடாநாடு மற்றும் வன்னி, மன்னார் மாவட்டங்களில் சனியன்று முழு அளவில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. நேற்றும் இப்பிரதேசங்கள் செயலிழந்தன. இன்று நிலைமை வழமைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்பட்டது. (ஐ-9-12)

# நாளைமறுதினத்துக்கு முன்னர் 19ஆவது திருத்தம் மீதான தீர்ப்பு!

கொழும்பு,ஒக்.14

19 ஆவது அரசமைப்புத் திருத்தம் மீதான தனது தீர்ப்பை நாளை மறுதினத்துக்கு முன்னர் உயர் நீதிமன்றம் சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் அறிவிக்கும் என்று நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரங்களை வெட்டுவதற்கு வகை செய்கின்றது இந்த அரசமைப்புத் திருத்தம்.

இத்திருத்தத்தை ஆட்சேபித்து பல்வேறு தரப்புக்களும் தாக்கல் செய்த மனுக்களை இம்மாத முற்பகுதியில் ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்றம் விசாரணை செய்திருந்தது.

இது தொடர்பான தனது முடிவை உயர் நீதிமன்றம் வழங்குவதற்கான 14 நாள் கால அவகாசம் நாளை மறுதினத்துடன் முடிவடைகின்றது. அதற்கு முன்னர் தனது முடிவை உயர் நீதிமன்றம் அனுப்பிவைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்படி திருத்தத்தை சட்டரீதியாக்குவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி மக்களின் அனுமதி பெற வேண்டுமா என்பது குறித்து உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெளிவுபடுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 2 முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் பகிஷ்கரிப்பைக் கைவிட்டனர்

நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இரண்டு எம்.பிக்கள் பகிஷ்கரிப்பைக் கைவிட்டிருக்கின்றனர்.

கட்சியின் அரசியல் உயர் பீடத்தின் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கொழும்பில் நடந்தது.

அங்கு கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் விடுத்த வேண்டுகோளை ஏற்று பகிஷ்கரிப்பைக் கைவிடுவதாக வன்னி மாவட்ட எம்.பியான ரிஸாட் பதுர்தீன் அறிவித்தார். கட்சி வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

திருமலை மாவட்ட எம்.பியான நிமர் தௌபீக்கும் பகிஷ்கரிப்பைக் கைவிடுவதாக கட்சித்தலைவருக்கு அறிவித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

வன்னி மாவட்ட எம்பியும் அமைச்சருமான நூர்தீன் மசூர் தமது பகிஷ்கரிப்பைக் கைவிட்டு கடந்த வெள்ளியன்று சபைக்கு வருகை தந்திருந்தது தெரிந்ததே. (ஐ)

# வடக்கு-கிழக்கு முஸ்லிம் பகுதிகள் அனைத்தையும் கொண்ட தனிஅலகு

## முஸ்லிம் காங்கிரஸ் கோருகின்றது

கொழும்பு,ஒக்.14

இணைந்த வடக்கு - கிழக்கில் தென்கிழக்கைத் தளமாகக் கொண்டு முஸ்லிம்களுக்கு தனியான ஓர் அலகு அமைக்கப்படவேண்டும். வடக்கு - கிழக்கில் உள்ள ஏனைய பெரும்பான்மை முஸ்லிம் பிரதேசங்களை நிலத் தொடர்பற்ற விதத்தில் இந்தத தென்கிழக்கு அலகோடு இணைக்க வேண்டும். தமிழ்மக்களுக்கு வழங்கப்படவுள்ள அதிகாரங்களை ஒத்ததான அதிகாரங்கள், வடக்கு - கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாகத்திலும் இறுதித் தீர்விலும் அந்தத் தனியான அலகுக்கு வழங்கவேண்டும்.

இத்தகைய தீர்மானம் ஒன்றை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் உயர்பீடம் ஏகமனதாக நிறைவேற்றியிருப்பதாக கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

முஸ்லிம்களுக்கான தனி அலகு என்ற நிலைப்பாட்டை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விட்டுக்கொடுத்துள்ளதாகச் சில செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தக் குழப்பநிலை குறித்து ஆராய்வதற்காகக் கட்சித் தலைவரும் அமைச்சருமான ஹக்கீம் தலைமையில் கட்சி உயர் பீடம் கூடியது.

அக்கூட்டத்திலேயே இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

- இவ்வாறு கட்சியின் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்தது. (ஐ)

### வாடகைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடுத்த 'செரண்டிப் எயார்லைன்' நிறுவனம் ஏற்பாடுகளை மேற்கொண்டிருப்பதாக அந்த நிறுவனத்தின் யாழ். முகவரகம் அறிவித்திருக்கிறது.

குடாநாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு விமானத்தில் பொருள்களை அனுப்பும் வசதிகளையும் விரைவில் ஆரம்பிக்க உள்ளதாகவும் 'செரண்டிப் எயார் லைன்' வட்டாரங்கள் தெரிவிததன. (ஐ)

### தீவகத்திலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோர் தமது பணிகளை முடித்துக் கொண்டு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் திரும்புவதற்கு கடற்படையினரால் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இது குறித்து புலிகள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் வருவதற்கு புலிகள் அனுமதிக்கப்பட்டனர். (ஐ-173)

### அமைச்சர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்பின்னர் அமைச்சர்கள், அதிகாரிகள் கொண்ட குழுவினர் ஆதார வைத்தியசாலைக்குச் சென்றனர். ஹர்த்தால் அசம்பாவிதங்களின் போது படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறினர். திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் வீட்டுக்கும் அக்குழுவினர் விஜயம் செய்து அவருடன் உரையாடினர். நேற்று பிற்பகலிலேயே குழுவினர் கொழும்பு திரும்பினர். (ஐ-12)

### ஊடகவியலாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறவுள்ள இக்கூடலில், மானிட விடுதலை நோக்கிய திசையில் ஈழத் தமிழர் உரிமைப் போராட்டமும் கலை, இலக்கிய, ஊடகங்களின் வகிபாகமும் - என்னும் அடிப்பொருளில் பல வேறு அமர்வுகள் தினமும் புதிய நேரப்படி காலை 9மணியிலிருந்து இரவு 8மணி வரை இடம்பெறவுள்ளன. ஈழத்துப் படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள், பார்வையாளர்களுடன் தென்னிலங்கையிலிருந்தும் பெரும் எண்ணிக்கையில் பேராளர்கள் இக்கூடலில் சங்கமிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. பேராளர்களுக்கான போக்குவரத்து, தங்குமிட, உணவு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளதால் பேராளர்களாகக் கலந்துகொள்ள விரும்புவர்களை முன்பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. இது தொடர்பான தகவல்களை எந்நேரமும் 0777245569 என்னும் செல்லிடத் தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்று மாநாட்டு ஒருங்கிணைப்புக்குழு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பட்டமளிப்பு விழாவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தை மீண்டும் தரிசிக்கும் வாய்ப்பு தாம் கல்வி பயின்ற பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின் மூலம் கிடைத்ததையிட்டு தாம் இரட்டிப்பு மகிழ்ச்சியடைவதாகவும் குறிப்பிட்டனர்.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழல் தொடர்ந்து நீடிக்க வேண்டும். இதற்கான முழு ஆதரவினையும் நாம் வழங்குவதற்கு ஆயத்தமாக இருக்கின்றோம். யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை இன ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் மருத்துவ பீடத்திற்கு 24 சிங்கள மாணவர்களைப் புதிய கல்வியாண்டுக்கு அனுமதித்துள்ளமை எமக்கு மகிழ்வைத் தருகிறது - என்று அவர்கள் தெரிவித்தனர்.

கிங்ஸ்லி பேர்னாட் யாழ் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டில் கலைப்பீடத்திற்கு அனுமதிக்கப்பட்ட முதல் தொகுதி மாணவர்களில் ஒருவராக இவர் தான் பயின்ற காலத்தில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவராக பணியாற்றியதையும் மகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தார்.

விஞ்ஞான பீடத்திற்கு அனுமதிக்கப்பட்ட மூன்றாவது தொகுதி மாணவர்களில் ஒருவரான ஆர்.எஸ். மாரசிங்க தென்பகுதியில் ஊனமுற்றோருக்கான புனர்வாழ்வு நிலையம் ஒன்றை நடத்தி வருகின்றார். (ஐ-ரி)


இரசாயனவியல்
அறிவொளி
PAPER CLASS
(முழு அலகும் உள்ளடங்கியது)
DIAS B.Sc.(Hons) Spl. in Che.
செவ்வாய் 6.15 மு.ப.
வியாழன் 6.15 மு.ப.
(9431) ஆரம்பமாகியுள்ளது.

மனமகிழ்வோடு வாழ்த்தும் "மணி"
யாழ்.பல்கலைக்கழக 22 ஆவது பட்டமளிப்பு விழாவில் "வணிகமாணி"ப் பட்டம் பெற்ற யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய, நல்லூர் சயன்ஸ் அக்கடமி நிறுவன ஆசிரியரும், பிரபல பொது அறிவு நுண்ணறிவுத்துறை நூலாசிரியருமான
உயர்திரு.பொ.உமாசங்கர்
B.COM. (spl),Spl. Trd.Com,N.Dip.in. B&F,
Member of C.I.B.(London)
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல உயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றேன்.
இயக்குநர் -
மணி கல்வி நிறுவனம் - வேலணை
T.P. 0777 - 148532
(9383)
ஆசிரிய நண்பன்
த.தனேந்திரன்

IIS
வட பகுதி மாணவர்களுக்கு
2003 இல் IIS நிறுவனம் தரும் பரிசு
விபரம் நாளைய உதயனில்

எமது புதிய வீடியோ CD வெளியீடு
'பைவ் ஸ்டார்'
பிரதிகள் உடன் பெறலாம்.
வீடியோ - விமல்
யாழ்ப்பாணம். (C-24234)

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பம்
2003 - 2004 கல்வியாண்டுக்கு பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவம் இன்று முதல் தொடர்ச்சியாக விநியோகிக்கப்படும்.
பூபாலசிங்கம் புத்தகசாலை,
(சி-24228) இல. 4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.10.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.